பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 01 வெள்ளிக்கிழமை (16.12.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 20

## படையினர் மக்களைத் துன்புறுத்துவதை நிறுத்தக் கோரி கண்காணிப்புக் குழுவுக்கு மக்கள் படை நேற்று மகஜர்

யாழ்ப்பாணம்,டிசெ.16

மக்கள் படை என்று தம்மை இனம் காட்டிக்கொண்ட குழுவினர் நேற்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டப் பிரதிநிதியிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

குடாநாட்டில் படையினரால் மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்புகள், தேடுதல்கள், கைதுகள் மற்றும் பொதுமக்களைத் துன்புறுத்தும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரி நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் மகஜர் ஒன்றைக் கையளிப்பதற்காக யாழ். கோயில் வீதியில் அமைந்துள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்திற்கு அவர்கள் சென்றனர்-

மக்கள் படை, தமது அலுவலகம் நோக்கி வருவதை அறிந்த கண்காணிப்புக் குழு அதிகாரிகள் அலுவலகக் 'கேற்றை' உடனடியாகவே பூட்டுப் போட்டு பூட்டினர்-

கண்காணிப்புக் குழுவின் நுழைவாயிலின் (16ஆம் பக்கம் பார்க்க)



## காணாமல்போனோர் விவகாரம்: சர்வதேச நீதிமன்றில் வழக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ். குடாநாட்டில் 1996, 1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரச படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல்போனோர் சார்பில் சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடர்வதற்கு இந்தக் கைதுகளினால் தமது பிள்ளைகளை

(16ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிசெ.16

கிழக்கில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறை நடவடிக்கைகளைக் கண்டித்தும் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரியும் இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

### போர் நிறுத்த விடயம் குறித்து புலிகளுடன்

# ஆசிய நாடு ஒன்றில்தான் பேச்சு

# ஐரோப்பிய நாடு எதிலும் அல்ல!

## ஜே.வி.பி. நிபந்தனைக்கு இணங்கினார் ஜனாதிபதி

கொழும்பு, டிசெம்பர்16

**போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்து இலங்கை அரசு புலிகளுடன் பேசலாம். ஆனால், அந்தப் பேச்சுகள் ஆசிய நாடு ஒன்றில்தான் நடக்க வேண்டும். ஐரோப்பிய நாடு எதிலும் அல்ல. - இவ்வாறு ஜே.வி.பி. விதித்த நிபந்தனைக்கு இணங்கியிருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. ஆசிய நாடொன்றில் பேச்சுகளை நடத்த இலங்கை அரசு தயாராக இருப்பதாகவும், இதுபற்றி நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.**

அமைதி முயற்சிகளை முன்னெடுப்பது சம்பந்தமாக அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சுகளை நடத்திவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதில் ஓர் அம்சமாக நேற்றுமுன்தினம் இரவு ஜே.வி.பியினரைச் சந்தித்தார்.

அலரிமாளிகையில் சுமார் இரண்டரை மணி நேரம் நடைபெற்ற இந்தப் பேச்சுகளில் ஜனாதிபதியுடன் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, நிமல் சிறிபால டி சில்வா ஆகியோரும் ஜே.வி.பி. சார்பில் அதன் தலைவர் சோமவன்ஸ அமர

(16ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் தீவிர தேடுதல் தொடர்கிறது; புலிகளின் முன்னாள் அலுவலகம் சல்லடை

யாழ்ப்பாணம், டிசெ.16

குடாநாட்டில் இராணுவத்தினரின் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் அதிகரித்து வருகின்றன. மாநகர எல்லைக்குட்பட்ட நாவலர் வீதியில், கஸ்தூரியார் வீதிச் சந்தியில் இருந்து பெருமாள் கோயில் சந்தி வரையிலான பகுதியில் நேற்றுக் காலை பெருமெடுப்பில் தேடுதல் நடத்தப்பட்டது. இதன்போது விடுதலைப் புலிப் பெண் போராளிகளின் அரசியல்துறை முன்னாள் அலுவலகமும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

யாழ். நாவலர் வீதி, பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி என்பவற்றுக்கு இடைப்பட்ட பகுதியே

(16ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகை அலுவலகமும் படையினரால் தேடுதல்

யாழ்ப்பாண்ம்,டிசெ.16

யாழ்.நகரை அண்டிய பகுதியில் நேற்றுக்காலை படையினர் மேற்கொண்ட தேடுதலின்போது "நமது ஈழநாடு" பத்திரிகை அலுவலகமும் சோதனையிடப்பட்டுள்ளது.

முன்னறிவித்தல் எதுவும் இன்றி நேற்றுக் காலை சுமார் 7.20 மணிக்கு அங்குசென்ற படையினர், பாதுகாப்பு அலுவலரை விசாரித்தனர். அலுவலகத்தில் பொறுப்பான அதிகாரிகள் எவரும் இல்லாதநிலையிலும் சகலபகுதிகளையும் சோதித்துவிட்டுச்சென்றனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்தவின் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைக்க ஐ.தே.கட்சி உறுதி அளிப்பு

கொழும்பு, டிசெ.16

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எடுக்கும் முயற்சிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படுமென்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுத் தெரிவித்திருக்கிறது.

அமைதி முயற்சிகளை முன்னெடுப்பது குறித்து நேற்று அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுகளை நடத்தியபோது ஐ.தே.கட்சி இவ்வாறு தெரிவித்திருக்கிறது.

நேற்றைய சந்திப்பில் அரச தரப்பில் ஜனாதிபதியுடன் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, சுசில் பிரேமஜயந்த ஆகியோரும், ஐ.தே.க. தரப்பில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, உபதலைவர் கரு ஜயசூரிய, எம்.பிக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுகளில் மூன்று விடயங்களை அரசுக்குப் புலிகள் வற்புறுத்துவர்

கொழும்பு, டிசெ.16

போர் நிறுத்தம் தொடர்பான விடயங்களை ஆராய்வதற்கான பேச்சுகளுக்கு வருமாறு இலங்கை அரசுத் தரப்பிலிருந்து விடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் அழைப்பு விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்து அந்தப் பேச்சுகளில் பங்குபற்றுவதெனப் புலிகளின் தலைமை தீர்மானித்தால், அந்தப் பேச்சுகளில் மூன்று விடயங்களை புலிகள் வலியுறுத்துவர் எனத் தெரிகின்றது. விடுதலைப் புலிகள் அத்தகைய பேச்சுக்குப் போவதற்கு முதல் அடிப்படையாக இரண்டு விடயங்களில் உறுதியாக இருப்பர் என்றும் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒன்று - முதலில் மூன்றாம் தரப்பு அனுசரணைப் பணியை மீள ஆரம்பிப்பதற்குத்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கந்தையில் விபத்து: பத்துப் படையினர் காயம்

பொலனறுவை மாவட்டம், வெலிக்கந்தை, நவசேனபுர பகுதியில் ஸ்ரீலங்கா படையினரின் கனரக ஊர்தியொன்று விபத்திற்குள்ளானதில் 10 படையினர் படுகாயமடைந்துள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன. ஸ்ரீலங்கா இராணுவத்தின் கெமுனு படைப் பிரிவைச் சேர்ந்த படையினரே காயமடைந்துள்ளனர். இவர்கள் தற்போது பொலனறுவை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## புலிகளைத் தடைசெய்யுமாறு இலங்கை அரசு ஐரோப்பிய ஒன்றியத்தைக் கோருவதற்கு முடிவு

கொழும்பு, டிசெ.16

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யுமாறு ஐரோப்பிய ஒன்றியத்தைக் கோர இலங்கையின் புதிய அரசுத் தலைமை தீர்மானித்திருப்பதாக அறியவருகின்றது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மூலம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிடம் இத்தகைய கோரிக்கை ஒன்றை விடுப்பதற்கு கொழும்பு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் முக்கிய கூட்டம் ஒன்று இந்த மாத இறுதியில் பிரஸ்ஸல்ஸில் நடைபெற இருக்கின்றது. அந்தக் கூட்டத்தில் இந்த விடயத்தை எடுத்துக் கொள்ளக் கூடியவாறு, ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகள் மட்டத்தில் பரப்புரை மற்றும் ஆதரவு திரட்டும் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு சம்பந்தப்பட்ட தரப்புகளில் இருந்து உத்தரவு பறந்திருப்பதாகத் தெரிகின்றது.

புலிகளைத் தடைசெய்ய வலியுறுத்தும் இதேபோன்ற கோரிக்கை ஒன்றை இந்தியா

(15ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதியிடம் மகஜர் கையளிக்கப்படுவதையும் மக்கள் படைப் பிரதிநிதி ஒருவர் பேச்சுகளுக்காக அலுவலகத்தின் உள்ளே அழைத்துச் செல்லப்படுவதையும் மக்கள் படையின் துண்டுப்பிரசுரங்கள் கண்காணிப்புக் குழு அலுவலகம் முன்பாக வைத்து விநியோகிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : பிரபா)

## நத்தாரை முன்னிட்டு சிகை அலங்கரிப்பு நிலையங்களைத் திறக்க அனுமதி

யாழ்ப்பாணம்,டிசெ.16

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் சகல சிகை அலங்கரிப்பு நிலையங்களும் திறக்கப்பட்டிருக்கும் என்று யாழ். மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி நத்தார் பண்டிகை தினத்தன்று பொதுவிடுமுறை தினம் என்றும் - அந்த ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# பத்திரிகைஅலுவலகத்தை சோதனையிட்டதற்குக் கண்டனம்!

## வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.16

'நமது ஈழநாடு' பத்திரிகை அலுவலகம் படையினரால் சோதனையிடப்பட்டதை வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது விடயமாக மேற்படி சங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

குடாநாட்டில் இருந்து வெளிவரும் சுயாதீன நாளிதழ்களுள் ஒன்றான 'நமது ஈழநாடு' அலுவலகம் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதலுக்குள்ளாக்கப்பட்ட சம்பவத்தினை வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

தமிழ் ஊடக சுதந்திரத்தையும் தமிழ் மக்களது தகவலறியும் சுதந்திரத்தையும் முடக்கிவிட கங்கணம் கட்டிநிற்கும் ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் தமிழ் ஊடக வியாளர்களைக் கொன்றும் ஊடக அலுவலகங்களைத் தாக்கியும் அச்சுறுத்தியும் வருகின்றனர்.

இதன் ஓர் அங்கமாகவே 'நமது ஈழநாடு' அலுவலகம் மீதான சுற்றிவளைப்புத் தேடுதலை நாம் கருதுகின்றோம். தமிழ் ஊடக சுகத்திரத்தைக்காக்குமாறு நாம் தொடர்ந்தும் குரல் எழுப்பிவருகின்ற போதும், அது ஆட்சியாளர்களது காதுகளில் செவிடன் காதில் ஊதிய சங்கு போன்றே இருக்கின்றது.

இந்த நிலையில் குடாநாட்டிற்குள் மீண்டும் ஏற்பட்டுவரும் அசாதாரணமான சூழலின் மத்தியில் ஊடக வியலாளர்களதும், ஊடக நிறுவனங்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன், செய்தி சேகரிக்கும் உரிமையையும் பேணவேண்டியதாகின்றது.

இவ்வாறானதோர் சூழலில் சர்வதேச ஊடக சமூகத்தினதும் எம்மக்களதும் ஆதரவை வேண்டி நிற்பதுடன், இவ்வாறன பிரச்சினைகளைச் சர்வதேச மட்டத்தில் தொடர்ந்தும் எடுத்துச்செல்ல நாம் உறுதிபூண்டுள்ளோம் என்பதையும் அறியத்தருகின்றோம் - என்று அதில் உள்ளது. (அ-எ)



இந்துசமய கலாசார அமைச்சின் தீர்மானத்தின்படி குடாநாட்டில் நேற்று கார்த்திகை விளக்கீட்டு நிகழ்வு இடம்பெற்றது. அநேகமான வீடுகளிலும் ஆலயங்களிலும் வாழைக்குற்றிகள் நடப்பட்டு தீபம் ஏற்றப்பட்டதைக் காணமுடிந்தது. விளக்குகள் ஏற்றப்பட்டதையடுத்து குடாநாட்டு வீதிகள் எங்கும் தீப ஒளி பிரவாகித்தது. இவ்வாறு கார்த்திகை தீபம் ஏற்றும்போது பிடிக்கப்பட்ட காட்சிகள் சில... (படங்கள்: பகீரதன்)

## சுவர் சரிந்து வீழ்ந்ததில் குடும்பஸ்தர் படுகாயம்

குடத்தனை,டிசெ.16

சுவர் சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் படுகாயமடைந்தார். நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில்குடத்தனை கிழக்கில் இடம்பெற்ற இந்தச் சம்ப வத்தில் அதே இடத்தைச்சேர்ந்த க.சிவாஸ்கர லிங்கம்(வயது-28)என்ற குடும்பஸ்தரே படுகாய் மடைந்தவராவார்.

இவர் சிகிச்சைக்காக மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார். பழைய வீட்டுச்சுவரை இடித்தபோது அது சம்பந்தப்பட்ட நபர் மீது சரிந்து வீழ்ந்ததாகக் கூறப்பட்டது. (எ-78)

# பலாலி விமானத்தளத்தை விஸ்தரிப்பதற்கு இந்தியா எவ்வகையிலும் உதவக் கூடாது

## தேசிய எழுச்சிப் பேரவை, பிரதமர் மன்மோகன் சிங்குக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,டிசெ.16

பலாலி விமானத்தள விஸ்தரிப்புக்கு இந்தியா எவ்வகையிலும் உதவி செய்ய முன் வரக் கூடாது. இவ்வாறு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கோரியுள்ளது யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை.

இது தொடர்பாக யாழ். மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவை, இந்தியப் பிரதமருக்கு 'மன்மோகன்சிங், பிரதமர், இந்தியா' என முகவரியிட்டு நேற்று அனுப்பிவைத்துள்ள கடிதத்தில்:-

ஆண்டாண்டு காலமாக எமது மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த எமது மண்ணை இந்திய உபகண்டத்தின் உதவியுடன் நிரந்தரமாகச் சுவீகரிக்கும் இலங்கை அரசின் கபடத்தனத்தை கண்டிப்பதோடு எந்த வகையிலும் இதை அனுமதியோம் என இந்திய அரசிற்கும் இலங்கை அரசிற்கும் தெரிவுபடுத்த முனைகின்றோம்.

எமது தாயகப் பிரதேசத்தை அபகரிக்கும் நீண்ட நோக்கத்தில் ஆரம்ப காலத்தில் ஓர் இராணுவ முகாமையும் விமானத்தளத்தையும் ஏற்படுத்திய ஸ்ரீலங்கா அரசு காலப்போக்கில் அதனை விஸ்தரிக்கும் நோக்குடன் பூர்வீகமாக வாழ்ந்த எமது மக்களை - உறவுகளை விரட்டியடித்து அகதிகளாக்கி இன்று 15 வருடகளாகிவிட்டன. தற்போது மேற்படிப் பிரதேச மக்கள் அகதிகளாக அகதிமுகாம்களில் அல்லலுறும் வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். கிட்டத்தட்ட 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தமது சொந்த வாழ்விடங்களை இழந்து இன்று நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

ஏற்கனவே, எமது மக்களின் வாழ்விடங்களை முற்றுகையிட்டு அபகரித்து அமைக்கப்பட்டிருக்கும் ஆக்கிரமிப்புப படைகளின் விமானத்தள விஸ்தரிப்பை மீண்டுமொரு யுத்தத்தை ஆரம்பித்து எமது மக்களைக் கொன்றொழிக்கும் செயற்பாடாகவே நாம் கருதவேண்டியுள்ளது.

விமானத்தளத்தை மேலும் விஸ்தரித்து எமது மக்களின் பூர்வீக இடத்தை அபகரிப்பதன் மூலம் எமது மக்கள் நிரந்தரமாகவே அகதிமுகாம்களில் வாழ்வதற்கான நிலையினையே ஸ்ரீலங்கா அரசானது மேற்கொள்கின்றது. ஸ்ரீலங்கா அரசின் கபடத்தனமான இந்தச் செயற்பாட்டுக்கு இந்திய அரசானது கைகொடுத்துதவ முன்வந்திருப்பது எமக்கு மிகுந்த ஆச்சரியத்தையளிக்கின்றது.

இந்திய மக்களுடன் கலாசார ரீதியாக, பண்பாட்டு ரீதியாக, மொழி, இன, மத ரீதியாக தொடர்புபட்டு இரத்த உறவுகளாக வாழ்ந்துகொண்டிருக்கும் எம்மை மீண்டுமொருமுறை மோதவிட்டு பிரிப்பதற்கு தென்னிலங்கைத் தலைமை ஈடுபட்டிருக்கின்றது.

ஆரம்பத்தில் விமான நிலைய விஸ்தரிப்பு, பின்னர் இந்த விமானத் தளத்தைப் பாதுகாக்க - பராமரிக்க இந்தியப் படைகளை வரவழைத்தல் என இந்தச் செயற்பாடுகளின் தொடர்ச்சியாக விடுதலைப் புலிகளுடன் யுத்தத்தை ஆரம்பித்து இந்தியப் படைகளுடன் விடுதலைப் புலிகளை மோதவிட்டு எமது தேச விடுதலைப் போராட்டத்தை அழிக்கும் ஒரு நீண்ட நோக்கிலேயே இலங்கை அரசின் இந்தச் செயற்பாடு அமைகின்றது.

எனவே, இலங்கையரசின் எந்த வகையான கபடத்தனமாக சிந்தனைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் இந்திய அரசானது உதவ முன்வரக் கூடாது எனக்கேட்டுக்கொள்கின்றோம். தற்போது அரங்கேற இருக்கும் பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்கு இந்தியா எந்த வகையிலும் உதவக்கூடாது என கேட்டுக்கொள்வதாடு அதனைத் தடுக்க முன்வரவேண்டுமென இந்திய அரசைத் தமிழ் மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (எ-6)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் இரவு ஜே.வீ.பி தலைவர்களுடன் அமைதி முயற்சிகள் குறித்து பேச்சுகளை நடத்துகிறார். அருகில் பிரதமர் ரட்னசிறி விக்கிரமநாயக்க உட்பட அமைச்சர்களும் காணப்படுகின்றனர்.

## திடீரென ஏற்பட்ட தீயினால் வீட்டு உடமைகள் நாசம்

கரவெட்டி,டிசெ.16

கரணவாய் வடக்கிலுள்ள வீடொன்றில் நேற்றுப்பிற்பகல் திடீரென ஏற்பட்ட தீயினால் வீட்டு உடமைகள் உட்படப் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகின.

கரணவாய் வடக்கு, வீரபத்திரர் கோயிலடியைச் சேர்ந்த சின்னத்தம்பி வன்னியசிங்கம் என்பவருடைய வீட்டிலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

தீடீரென ஏற்பட்ட மின் ஒழுக்கே இந்த தீவிபத்துக்குக் காரணம் என்று ஒரு தகவல் தெரிவித்தது. (எ-6-70)

## கண்ணிவெடி அகற்றிய பிரதேசம் இன்று கையளிப்பு

வடமராட்சி,டிசெ.16

பருத்தித்துறை-மருதங்கேணி வீதியில் -ஆனைவிழுந்தான் தொடக்கம் வல்லிபுரக் கோயில் வரையான பகுதியில் கண்ணிவெடிகள் மீட்கப்பட்ட பிரதேசம் இன்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறைப் பிரதேச செயலரிடம் 'டெனிஸ்' கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் கையளிக்கப்படவுள்ளது.

'டெனிஸ்' கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் கடந்த சில மாதங்களாக இப்பிரதேசத்தில் கண்ணிவெடிகளை தேடிக்கண்டுபிடித்து அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தது தெரிந்ததே. (எ-173)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# அபிவிருத்திக்கு ஒதுக்கிய நிதியை அழிவுக்குத் திருப்பும் நிலை வருமா?

"வடக்கு - கிழக்கை யுத்தத்துக்குள் தள்ளிவிட்டு தெற்கை உங்களால் அபிவிருத்தி செய்யமுடியாது."

-இவ்வாறு தென்னிலங்கை அரசுத் தலைமைக்கு நாடாளுமன்றத்தில்வைத்து இடித்துரைத்துத் தெரிவித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

ஒற்றையாட்சிச் சிந்தனைக் குட்டைக்குள் ஊறி நின்று, ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளில் எட்டப்பட்ட இணக்கங்களைப் புறம்தள்ளி, இனப்பிரச்சினையின் ஆழமான யதார்த்த உண்மைகளை கவனத்தில் கொள்ளாமல், புதிதாக சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கப் போவதாக புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு கூறுகின்றது.

ஆனால், நடைமுறைச் சாத்தியமற்ற - மெய்மை நிலையை உணர்ந்துகொள்ள மறுக்கின்ற - இந்த அரசியல் முறையால் சமாதானத்தை எட்டவே முடியாது என்பதையும் அது யுத்தத்திலேயே கொண்டுபோய் முடிக்கும் என்பதையும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்காக 650 பில்லியன் டொலர் (சுமார் ஆறாயிரத்து ஐந்நூறு கோடி ரூபா) வெளிநாட்டு உதவி பெறப்படும் என்றும்-

அத்தோடு அரச நிதியங்கள்மூலம் ஆண்டொன்றுக்கு 450 கோடி ரூபா ஒதுக்கப்படும் என்றும்-

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

யுத்த நகர்வை முன்னெடுக்கும் அரசு இந்த நிதியை - அதாவது வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியை- யுத்தத்தை நோக்கித் திருப்பி விடாது என்பதற்கு என்ன உத்தரவாதம் என்று கேள்வி எழுப்பியுள்ள சுரேஷ் பிரேமச்சந்திரன், கடந்த காலங்களிலும் இவ்வாறு அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதி பின்னர் தமிழர்களுக்கு எதிரான யுத்தத்துக்குத் திருப்பி விடப்பட்டதையும் நினைவுபடுத்தியிருக்கின்றார்.

நாட்டின் மொத்த செலவினத்தில் 15 வீதத்தை பாதுகாப்புக்கென ஒதுக்கியிருப்பதன்மூலம் தனது யுத்த முனைப்புப் போக்கை அரசு வெளிப்படுத்தி நிற்பதைச் சுட்டிக்காட்டும் அவர், இத்தகைய போக்குடைய அரசு, வடக்கு - கிழக்கு அபிவிருத்தியென்ற பெயரில் ஒதுக்கும் நிதியைப் பின்னர் யுத்த செலவினத்துக்கே மாற்றி வடக்கு - கிழக்கு அழிவுக்குப் பயன்படுத்தப்போகின்றது என்பதையும் சூசகமாகச் சுட்டிக்காட்டி எச்சரிக்கின்றார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிப்புற்ற மக்களின் அன்றாட, அவசர, அவசிய தேவைகளை நிறைவு செய்வதற்கு உருவாக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பையே தனது சதிமறைவுத் திட்டங்கள் மூலம் தூக்கிக் கடாசிய தென்னிலங்கைப் பேரினவாத அரசியல் தலைமைகள், வடக்கு - கிழக்கை அபிவிருத்தி செய்யப்போவதாகக் கூறுவதும், அதற்காக பல ஆயிரம்கோடி ரூபாக்களை ஒதுக்கீடு செய்திருப்பதாகக் காட்டுவதும்கூட வெறும் கண்துடைப்பு நாடகம்தான் என்பதும் உலகறிந்த இரகசியம்.

அமைதி முயற்சிகளை முன்னெடுப்பது குறித்து சிந்திப்பதற்கு முன்னர், அதற்கு வாய்ப்பான சூழ்நிலையைத் தந்திருக்கும் யுத்த நிறுத்த உடன்பாட்டை எப்படித் தக்க வைத்திருப்பது, அமைதி நிலையை எவ்வாறு பேணுவது என்பது குறித்துத்தான் அவசரமாகச் சிந்திக்க வேண்டியிருக்கின்றது.

எந்நேரமும் உடைந்து போகக்கூடிய நெருக்கடி நிலையை நோக்கி யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலாக்க விவகாரம் நகர்ந்து கொண்டிருக்கின்றது. அதைத் தடுத்து நிறுத்தி, ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்துவதிலும், யுத்தநிறுத்தம் நின்று, நிலைத்து, நீடிப்பதற்கான வழிவகைகளை நாடுவதிலும் ஆர்வம் காட்டாத தென்னிலங்கை அரசுத் தலைமை, அதைவிடுத்து வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்வது குறித்துப் பேசுவதும் - பிரசாரம் செய்வதும் - அர்த்தமற்றவை.

யுத்த நிறுத்தத்தை செவ்வனே கடைப்பிடித்து நிலைநிறுத்துவதற்கான ஏற்பாடுகளையும், நடவடிக்கைகளையும் செய்வதாயின், அதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பினரிடையேயும் தொடர்புகளை ஏற்படுத்தி விடயத்தைக் கையாளும் நோர்வே அனுசரணையாளரின் பங்களிப்பு அவசியம்.

ஆனால், தனது பௌத்த, சிங்களப் பேரினவாதச் செருக்கினாலும் மேலாண்மைத் 'திமிர்'ப் போக்கினாலும் அனுசரணைத் தரப்பை மமதையோடு கையாண்டு, அனுசரணையாளர்களின் பங்கு, பணியைக் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது தென்னிலங்கைத் தலைமை. அதனால் தமது அனுசரணைப் பணியைத் தொடர்வதா - மீள ஆரம்பிப்பதா - என்பதை நோர்வேத்தரப்பு இன்னும் தீர்மானிக்கவில்லை.

நிலைமை இப்படியே இழுபட்டுமோசமான கட்டத்தை அடையுமானால் - அல்லது அனுசரணைப் பணியைத் தொடர நோர்வே மறுத்து விலகுமானால் - வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்டதாக இலங்கை அரசு காட்டும் நிதி, சுரேஷ்பிரேமச்சந்திரன் எம்.பி. கூறியமை போன்று தன்பாட்டில் யுத்தத்துக்குத் திரும்பிவிடும் கட்டமே உருவாகும்.

களநிலைவரங்கள் அப்படியான நிலைமையைத்தான் உணர்த்துகின்றன; ஏற்படுத்துகின்றன. அதில் மாற்றம் வருவதற்கான அறிகுறி எதுவுமே தென்படவில்லை.

# கறுப்புக் கண்ணாடி பொருத்தப்பட்ட தலைக்கவசத்துக்குப் பொலீஸார் தடை

யாழ்ப்பாணம்,டிசெ.16

முகம் தெரியாத கறுப்புக்கண்ணாடி பொருத்தப்பட்ட தலைக்கவசத்தை மோட்டார் சைக்கிளில் செல்வோர் பயன்படுத்தக்கூடாது என்று யாழ். மாவட்ட போக்குவரத்துப் பொலீஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி ஐ.பி.சேனரட்ண தெரிவித்தார்.

தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளில் வருவோர் படையினர் மீது தாக்குதல் நடத்துகின்றனர் என்றும் -

இதனால் தலைக்கவசம் அணிய பொலீஸார் தடை விதித்துள்ளனர் என்றும் - பரவிய தகவல் குறித்துக் கேட்டபோதே பொறுப்பதிகாரி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

யாழ். குடாநாட்டில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்பவர்கள் தலைக்கவசம் அணிந்து செல்லக்கூடாது என்று பொலீஸார் ஒருபோதும் தடை விதிக்கவில்லை.

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்வோரின் பாதுகாப்புக்கருதியே தலைக்கவசம் அணிந்து செல்லவேண்டும் என்று தொடர்ச்சியாக அறிவுறுத்தி வருகிறோம். மக்களிடம் தண்டப்பணம் அறவிடுவது எமது நோக்கமல்ல. அவர்களின் உயிரைப் பாதுகாப்பதற்குரிய ஒரு வழியாகவே தலைக்கவசத்தை அணியச் சொல்கிறோம்.

இதனைச் சிலர் பொருட்படுத்துவதில்லை. விபத்துகள் ஏற்படும்போது தலைக்கவசம் அணியாதவர்களுக்கு உயிர் ஆபத்து ஏற்படும் வாய்ப்பு அதிகம் உள்ளது. மோட்டார் சைக்கிள் செலுத்துபவரும் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்து செல்பவரும் கட்டாயமாகத் தலைக்கவசம் அணிதல்வேண்டும்.

இதேவேளை, கறுப்பு நிறக்கண்ணாடி பொருத்தப்பட்ட தலைக்கவசம் அணிவதற்குப் பொலீஸார் தடை விதித்துள்ளனர் - இவ்வாறு பொலீஸ் அதிகாரி கூறினார். (ஒ-7-13)

# சந்திரிகாவுக்கு காத்திருந்த விமானம்: சக பயணிகள் அதிகாரிகள் மீது சீற்றம்

கொழும்பு,டிசெ.16

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து சிங்கப்பூர் நோக்கிப் புறப்படவிருந்த ஸ்ரீலங்கன் விமான சேவையைச் சேர்ந்த விமானம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்காகக் காத்திருக்க நேரிட்டது. பயணிகள் சீற்றமடைந்தனர்.

சிங்கப்பூர் சென்று தமது அடுத்த பயணத்தை வேறு விமான சேவைகளில் தொடர இருந்த பயணிகள் இதனால் சீற்றமடைந்தனர்.

கடந்த 13ஆம் திகதி நள்ளிரவு 12.40 மணிக்குப் புறப்படவிருந்த மேற்படி விமானத்தில் பயணிக்கவிருந்த பயணிகள் இரவு 9 மணியளவில் விமான நிலையத்துக்கு வந்து தமது பயணம் தொடர்பான செயற்பாடுகளை முடித்து விமானம் புறப்படும் வரை காத்திருந்தனர்.

ஆனால், விமானம் புறப்படும் நேரம் கடந்தும் முன்னாள் ஜனாதிபதி வரும்வரை காத்திருக்க நேரிட்டது.

இதுபற்றி அறிந்திராத விமானப் பயணிகள் விமானத்தின் தாமதம் பற்றி விமான நிலைய அதிகாரிகளைக் கேள்வி கேட்டு துளைத்தெடுத்தனர்.

இறுதியாக முன்னாள் ஜனாதிபதி விமானத்தில் ஏறிய பின்னர் அதிகாலை 1.40 மணிக்கு விமானம் சிங்கப்பூர் நோக்கிப் புறப்பட்டது. அவர் ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதற்காகவே சிங்கப்பூர் சென்றார் என்றும் இச்சம்பவம் பற்றி சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் வினவப்பட்டபோது அச்சம்பவம் உண்மைதான் எனத் தெரிவிக்கப்பட்டதாகவும் 'லங்கா தீப' பத்திரிகை தெரிவித்துள்ளது. (ஒ-2[illegible])

# ஓய்வூதியம் வழங்கும் தினங்கள்

வலி.தெற்கு,டிசெ.16

அடுத்த ஆண்டுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ள திகதிகள் பற்றிய விவரங்களை ஓய்வூதியத் திணைக்களம் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு அறிவித்துள்ளது.

அதன்படி, பின்வரும் திகதிகளில் ஓய்வூதியங்கள் வழங்கப்படவுள்ளன

ஜனவரி மாதம் 10 ஆம் திகதி, பெப்ரவரி மாதம் 09ஆம் திகதி, மார்ச் மாதம் 09ஆம் திகதி, ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதி, மே மாதம் 10 ஆம் திகதி, ஜூன் மாதம் 08 ஆம் திகதி, ஜூலை மாதம் 11ஆம் திகதி, ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி, செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி, ஒக்ரோபர் மாதம் 04ஆம் திகதி, நவம்பர் மாதம் 09ஆம் திகதி, டிசெம்பர் மாதம் 07ஆம் திகதி. (ஒ-152)

# சமூக சேவை உத்தியோகத்தர் மாவட்டத் திணைக்களத்தின் கீழ்

வலி.கிழக்கு, டிசெ.16

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள சமூகசேவை உத்தியோகத்தர்கள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் மாவட்டச் சமூக சேவைத் திணைக்களத்தின் கீழ் இயங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகச் சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூகசேவைத் திணைக்களம் யாழ். மாவட்ட அலுவலகம் தற்காலிகமாக யாழ். செயலகத்துக்குச் சமீபமாகக் காட்டுக்கந்தோர் வீதியில் உள்ள பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் இயங்கவுள்ளது.

இந்த அலுவலகத்திற்கான காணி யாழ். பண்ணைப் பகுதியில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு அருகில் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் அங்கு கட்டடம் அமைக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

தற்போது பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சமூக சேவை உத்தியோகத்தர்களை வாரந்தோறும் புதன் கிழமைகளில் அந்தந்தப் பிரதேச செயலகங்களில் மக்கள் சந்திக்கமுடியும். மற்றைய அலுவலக நாள்களில் வெளிக்கள வேலைகளில் அவர்கள் ஈடுபடுவர். (ஒ-180)

# அடுத்த வருட நடுப்பகுதியில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்

## வடக்கு - கிழக்கில் நடத்துவது குறித்து முடிவில்லை

யாழ்ப்பாணம்,டிசெ.16

இலங்கை முழுவதும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் நடத்துவதற்கான ஆரம்ப கட்டப் பணிகளைத் தேர்தல் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் தற்போதைய உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் முடிவடைகின்றது. புதிய உள்ளூராட்சி சபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் நடத்தப்படவேண்டும்.

இத்தேர்தலை இலங்கையின் சகல பிரதேசங்களிலும் நடத்துவதற்கான ஆரம்பக்கட்ட வேலைகளைத் தேர்தல் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இதேவேளை -

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின்போது பாதுகாப்பு நிலைவரங்களைக் கருத்திற்கொண்டு வடக்கு - கிழக்கு மாகாணத்தின் அநேக பிரதேசங்களில் தேர்தல் நடத்தப்படவில்லை.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலையும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடத்துவதா என்பது குறித்துத் தேர்தல் நடத்தப்படும் திகதி அறிவிக்கப்பட்ட பின்னரே தீர்மானிக்கப்படும் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(த-202-203)

**நாளை**

மார்கழி 2
சனிக்கிழமை
17.12.2005
திதி: துதியை
முன்னிரவு : 11.57 வரை
நட்சத்திரம் : திருவாதிரை
பிற்பகல் : 12.40 வரை
சுபநேரம் : 03.22 - 04.52
ராகுகாலம் : 09.22 - 10.52
(யாவும் பழைய நேரப்படி)

# பிறப்பு, இறப்பு பதிவுப்பணி ஜனவரி முதல் கணனி மயம்

யாழ்ப்பாணம்,டிசெ.16

இறப்பு, பிறப்பு பதிவுகள் தொடர்பான புள்ளிவிவரங்களைக் கணனிமயப்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களைப் பதிவாளர்நாயகம் திணைக்களம் மேற்கொண்டுவருகிறது.

அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இறப்பு, பிறப்பு பதிவுகளின் புள்ளிவிவரங்கள் யாவும் கணனிமயப்படுத்தப்படவுள்ளன என்று மேற்படி திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக மாவட்டரீதியில் பிறப்பு, இறப்பு பதிவாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டப் பதிவாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ். அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பதிவாளர் நாயகம் எல்.கே. ரத்னசிறி , பதிவாளர் நாயகத் திணைக்களப் பிரதிப் புள்ளிவிவரப் பணிப்பாளர் திருமதி சுசந்த ரணதீர, பதிவாளர் நாயகத் திணைக்களப் புள்ளிவிவரவியலாளர் கு.திருவரன், வடக்கு - கிழக்கு மாகாண மேலதிகப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவ ஐயர் ஆகியோரும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களும் பங்கேற்கவுள்ளனர்.

இதேவேளை-

பிறப்பு மற்றும் இறப்பைப் பதிவு செய்வதற்கான புதிய நடைமுறை அடுத்தவருடம் ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவிருக்கின்றது.

இப்புதிய நடைமுறை குறித்தும் இந்த அறிவுறுத்தல் கூட்டத்தில் விளக்கமளிக்கப்படவுள்ளது.

பிறப்பு மற்றும் இறப்புக்குரிய வாழ்வியல் புள்ளி விவரங்களைப் பதிவாளர்கள் தயாரித்து அனுப்பும் நடைமுறை தற்சமயம் உள்ளது.

இந்த விவரங்கள் மூலம் பூரணமான தகவல்களைப் பெறமுடியாத சூழல் நிலவுவதால் புதிய நடைமுறை அமுலுக்குக் கொண்டுவரப்படுகின்றது. (ஒ-3-203-202)

**உதயவாக்கு**

துணிவற்ற அழகு, இரக்கமற்ற கோபம் இவற்றால் எதையும் சாதிக்க முடியாது. - ஓர் அறிஞர்.





யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் 40 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வின் போது கௌரவிக்கப்பட்ட மூத்த கலைஞர்களை முதலாவது படத்திலும் சிறப்பு நிகழ்வாக இடம்பெற்ற யாழ்.திருமறைக் கலாமன்ற மகளிர் அவையினரால் மேடையேற்றப் பட்ட "ஜெனோவா" நாட்டுக்கூத்தின் ஒரு காட்சியை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

(ஒ-190)

# ஜனாதிபதி மற்றும் ஜே.வி.பி, ஹெல உறுமயவினது தீர்வு முயற்சி தொடர்பான நிலைப்பாடுதான் என்ன?

## பகிரங்கப்படுத்தக் கோருகிறது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, டிசெ.16

அமைதி முயற்சிகள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவருக்கு ஆதரவைத் தெரிவிக்கும் ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளும் தமது நிலைப்பாட்டை திட்டவட்டமாகவும், தெளிவாகவும் உடனடியாக அறிவிக்க வேண்டும்.

- இவ்வாறு நேற்றுமுன்தினம் கோரியிருக்கிறது ஐக்கிய தேசியக் கட்சி. எதிர்க் கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு கோரினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

அமைதிப் பேச்சுகள் தொடர்பில் ஜாதிக ஹெல உறுமயவும், ஜே.வி.பியும் தத்தமது நிலைப்பாட்டை தெரிவிக்கவேண்டும். ஏற்கனவே, நோர்வே அனுசரணையாளர்கள் தொடர்பில் கடும் விமர்சனங்களை முன்வைத்த இவர்கள் இப்போது நோர்வேயை மீண்டும் அழைக்க உடன்பட்டுள்ளனர். எனவே, அரசியல் இலாபம் கருதி இவ்வாறு செயற்படாமல் - மக்களைத் தொடர்ந்து ஏமாற்றாமல் - அமைதிப் பேச்சுகள் பற்றிய நிலைப்பாட்டை இந்தக் கட்சிகள் வெளியிட வேண்டும்.

அதேசமயம், ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண உதவப்போவதாக இந்தியா கருத்துத்தெரிவித்து வருகிறது. ஆனால், ஒற்றையாட்சிக்குள் தேசியப் பிரச்சினையைத் தீர்க்கப் போகிறார் என ஜனாதி பதி கூறிவருகிறார். இது இந்தப் பிரச்சினையில் முரண்பாடான விடயமாகும். எனவே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும்.

- இவ்வாறு திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. மேலும் கூறினார்.

(ஒ)

# உதவி வழங்கும் நிறுவனங்களிடையே ஒருங்கிணைப்பிருந்தால் அதிக பயன்

## சமூக சேவை அலுவலர் வலியுறுத்து

வலி.கிழக்கு,டிசெ.16

வலுவிழந்தவர்களுக்கு உதவி வழங்கும் நிறுவனங்களின் ஒருங்கிணைந்த சேவை மூலமே உரிய பயனாளிகளைச் சென்றடைய முடியும்.

- இவ்வாறு வலி.கிழக்குப் பிரதேச செயலக சமூக சேவை அலுவலர் தெரிவித்தார்.

வலுவிழந்தவர்களுக்கு ஒரே சாதனத்தை இரு நிறுவனங்கள் ஒரே சமயத்தில் வழங்குகின்றன. இதன்போது ஒரே நபரே இரு இடங்களில் பயனைப்பெற வாய்ப்பேற்படுகிறது.

சம்பந்தப்பட்ட நிறுவனங்கள்ஒருங்கிணைந்து செயற்பட்டால் பயனாளிகள் தெரிவு முதல் சாதனங்கள் வழங்குவதுவரை சீராக இடம்பெற்று பூரண பயனடையமுடியும்.

வலுவிழந்தோருக்கு அன்பளிப்பாக உபகரணங்கள் அல்லது சாதனங்களை வழங்கும் நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் உரியபயனாளிகளுக்குச் சாதனங்கள் சென்றடைய வழிவகுக்க முடியும் - இவ்வாறு அவர் கூறினார்.

(ஒ-180)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1941 - 04 - 25

மறைவு 2004 - 12 - 16

### ஜோசப் அன்ரனி(பபி)

மீளாத்துயில் கொண்ட
குடும்பத்தின் குல விளக்கே
ஆண்டொன்று ஆனதுவோ
ஆறவில்லை எம் துயர்
அணையாச் சுடராய் உம்
நினைவுகளை -எம்
இதயங்களில் சுமக்கின்றோம்.

(44160)

ஸ்ரேசன் றோட்,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுடன் வாழும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.



## யாழ்.அத்தியடி பிள்ளையார் கோயில்

ஆருத்திரா தரிசனமும் திருவாதிரை
உற்சவமும் 17-12-2005
சனி காலை 5 மணிக்கு
அபிஷேகத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து
திருவிழா நடைபெறும்.

(44158) -ஆலய நிர்வாகத்தினர்.


## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம்,டிசெ.16

கவிஞர் நாவண்ணனின் 'சுனாமிச் சுவடுகள்', 'அக்கினிக்கரங்கள்' ஆகிய இரண்டு நூல்களின் அறிமுக விழா நாளை சனிக்கிழமை முற்கபல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் இருக்கும் தொடர்பகத்தின் கேட்போர் கூடத்தில் யாழ்ப்பாணம் தேசியப் பேரவை உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நூலின் சிறப்புப் பிரதியை அருட்திரு. கான்ஸ்போவர் பெற்றுக் கொள்வார்.

(3-15)

## மேலதிக மாவட்ட பதிவாளர் நியமனம்

யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ்.மாவட்ட காணிப்பதிவு மேலதிக மாவட்டப் பதிவாளராக திருமதி மகாராணி ராஜரட்ணம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த முதலாம் திகதி இவர் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-203-202)

## சலூனில் திருட்டு

வலி.கிழக்கு,டிசெ.16

கல்வியங்காடு பகுதியில் உள்ள சிகையலங்கரிப்பு நிலையமொன்றில் கடந்த 10 ஆம் திகதி சனிக்கிழமை இரவு உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த வானொலி, தொழில் சாதனங்கள் போன்றவற்றைத் திருடிச் சென் றுள்ளனர்.

இது தொடர்பாக கோப்பாய்ப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஒ-180)


## 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 16 - 08 - 1986

உதிர்வு 16 - 12 - 1987

செல்வன்

### சொர்ணலிங்கம் டினேஸ்குமார்

நிஜமான மலர் ஒன்று நிழலாக சென்றதுவோ
நீ இன்றி எம் உள்ளம் நிலை இன்றி தவிக்குதுவே
ஒடி வருவாயா டினேஸ் ஒடிவருவ்வாயா..
உன் மதிமுகம் கான எம் உள்ளம் தவிக்குதுவே.

சந்தை வீதி,
மானிப்பாய்.

பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அச்சப்பா,
சகோதரிகள், மாமா, மாமிமார்,
பெரியப்பா, பெரியம்மா.

(44154)(11-18-34)



## கலைஞர்கள் தேவை

ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள சிறீக்குமரன் இசைமன்றத்திற்கு பாடகர், பாடகிகள் தேவை.மற்றும் கிற்றார், டிறம்ஸ், ஒக்தரபாற், தபேலா ஆகிய வாத்தியக் கலைஞர்களும் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மேல்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கலாம், விண்ணப்ப முடிவு திகதி 31-12-2005. இலை மறை காயாய் உள்ள கலைஞர்களுக்கு இது ஓர் அரிய வரப்பிரசாதம்.

- தொலைபேசி இலக்கம்
0776531167.

(44157)



## துயர் பகிர்கின்றோம்

அகில இலங்கை அஞ்சல் தந்தித் தொடர்புகள் சேவையாளர் சங்க யாழ்.கிளையின் அங்கத்துவ சகோதரர்களான கொடிகாமம் அஞ்சல் அலுவலகத்தைச் சேர்ந்த **டி.எப்.யோகநாதன்**, மிருசுவில் உப.அஞ்சல் அலுவலகத்தைச் சேர்ந்த **டி.எப்.திருநேச வீரசிங்கம்** ஆகியோரின் அன்புத் தாயாரான

### இம்மனுவேல் விக்டோறியா *(மலர்)*

அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன், அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், செயலாளர், நிர்வாகிகள், அங்கத்துவ சகோதரர்கள்,
அகில இலங்கை அஞ்சல் தந்தித்தொடர்புகள்
சேவையாளர் சங்கம்,
யாழ்.மாவட்டம்.

(44154)



## ஆங்கில வகுப்புகள் ஆரம்பம்

இடை நிறுத்தப்பட்டிருந்த பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கான இலவச ஆங்கில வகுப்புகள் 17.12.2005 [சனிக்கிழமை] முதல் மீண்டும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஆரம்பமாகும்.

(44126) - இணைப்பாளர்.



## 14.12.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 200816922
இலிருந்து 200832896 வரை

சீட்டிழுப்பு இல. 1667

வெற்றி எண்கள்

19 28 32 38

சுப்பர் எண் 05

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.20,00,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 20,00,000/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 27 | 5000/- | 1,35,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 432 | 1000/- | 4,32,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,371 | 500/- | 6,85,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 20,823 | 40/- | 8,32,920/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 19,814 | 20/- | 3,96,280/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,95,618 | 10/- | 29,56,180/- |
| | | மொத்தம் | 74,37,880/- |
| [illegible] | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 79,37,880/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 27,90,150/-

| | |
|---|---|
| [illegible] | 200817349-6-05 |
| [illegible] | 200826701-8-09 |
| [illegible] | 200826403-5-50 |
| [illegible] | 200831129-0-58 |
| [illegible] | 200830749-1-50 |

# மீண்டும் பண்டாரநாயக்கா யுகம் ஆரம்பம்

## சபையில் பிரதிச் சபாநாயகர் பெருமிதம்

இடதுசாரிக் கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்து அரசு ஒன்றை அமைத்தது இது முதற்தடவை அல்ல. 1956ஆம் ஆண்டிலேயே எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா தலைமையில் பிலிப் குணவர்தன போன்ற இடதுசாரித் தலைவர்களின் ஆதரவுடன் மகத்தான வெற்றி ஒன்றை அடைந்தோம். அதே போன்றுதான் எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இடதுசாரிகளின் ஆதரவுடன் பாரிய வெற்றி ஒன்றை அடைந்துள்ளார். மீண்டும் 56ஆம் ஆண்டின் புரட்சியுகம் இப் பொழுது ஏற்படுத்தப்பட்டுள்ளது. - இப் படிப் பெருமைப்படுகின்றார் பிரதி சபாநாயகர் கீதாஞ்சன குணவர்தன.

வரவு - செலவுத்திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான நான்காவது நாள் விவாதம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்கு பண்டாரவின் தலைமையில் வழமைபோல் நேற்றுமுன்தினம் சபை கூடியது.




225 உறுப்பினர்களைக் கொண்ட சபையில், நேற்றுமுன்தினம் சபை கூடியபோது 25 உறுப்பினர்கள் கூட சபையில் இல்லை. 85 வீதமான நாற்காலிகள் வெறுமையாகவே காணப்பட்டன.

இந்த நிலையில்தான் பிரதி சபாநாயகர் கீதாஞ்சன குணவர்தன உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மக்களின் ஆணையைப்பெற்றே ஆட்சிக்கு வந்துள்ளார். மஹிந்த சிந்தனையின் மூலம் நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையிலேயே வரவு - செலவுத் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது.

இது ஒரு வறுமை ஒழிப்புத்திட்டம் என்பதே சரியானது. 1960ஆம், 1970ஆம் ஆண்டுகளில் முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவின் தலைமையில் தேசிய பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டது. பின்தங்கிய நிலையில் வாழ்ந்த கிராமப்புறமக்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட்டது.

இன்று 67 வீதமான தோட்டப்புற மக்களும் 37 வீதம் கிராமத்தவர்களும், நகர்ப்புறங்களில் 7வீதமானவர்களும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர். இம்மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான பல திட்டங்கள் இந்த வரவு - செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தேசிய வருமானத்தில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ள தேயிலை உற்பத்தித்துறை மேலும் அபிவிருத்தி செய்யப்படும். தொழிலாளர்களுக்குப் பல நலன்புரித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த வரவு - செலவுத்திட்டத்தில் தனியார்துறை ஓரம்கட்டப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டுகின்றனர். அது தவறு. அரசுதுறையினருக்கு அளிக்கப்படும் சகல வசதிகளும் தனியார்துறைக்கும் வழங்கப்பட்டு, கூட்டு முயற்சியில் பொருளாதாரம் அபிவிருத்தி செய்யப்படும்.

ஏற்கனவே, அரச நிர்வாகத்திடமிருந்து கைநழுவிய இலங்கைப் போக்குவரத்துச் சபை, துறைமுகம் என்பன மீண்டும் பொறுப்பேற்கப்பட்டு தேசிய மயப்படுத்தப்படும். - எனவும் பிரதி சபாநாயகர் சபையில் உறுதியளித்தார்.

### தேரர் தேடும் தேசிய சிந்தனை

ஜாதிக ஹெல உறுமய உறுப்பினரான வண.மேதானந்த எல்லாவல தேரர் உரையாற்றும்போது, பட்ஜெட் தொடர்பாகப் புதிய வியாக்கியானம் ஒன்றைச் செய்தார்.

அதாவது நாடு சுதந்திரம் அடைந்த காலம் முதல் தொடர்ச்சியாக தயாரிக்கப்பட்ட வரவு - செலவுத்திட்டங்கள் அனைத்தும் வெளிநாடுகளில் தலையை வைத்துக் கொண்டு தயாரிக்கப்பட்டவை.

ஆனால், இம்முறை எமது ஜனாதிபதியினால் தயாரிக்கப்பட்ட வரவு - செலவுத்திட்டம் முழு உடம்பையும், தலையையும் உள்நாட்டில் வைத்துக்கொண்டே தயாரிக்கப்பட்ட ஒன்று. ஒவ்வொருவரது மனதிலும் தேசிய சிந்தனை ஏற்படும்வரை நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாது என்று மேதானந்த எல்லாவல தேரர் கூறினார். தேரரின் பேச்சு எவரையும் சீண்டாமல் அமைதியான முறையில் காணப்பட்டது.

### கௌரவத்தை கேட்டுப் பெறும் கலாநிதி மேர்வின்

இந்த விவாதத்தின் போது மற்றும் ஒரு சுவையான சம்பவமும் இடம்பெற்றது. சபைக்கு தலைமை தாங்கிக்கொண்டிருந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு, கிழக்கை யுத்தத்துக்குள் தள்ளிவிட்டுவிட்டு தெற்கை உங்களால் அபிவிருத்தி செய்யமுடியாது

## சபையில் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. எச்சரிக்கை

இனப்பிரச்சினை விவகாரம் இழுபறிபட்டுச் செல்லுமானால் எந்த ஒரு வெளிநாடும் இங்கே முதலீடுகளைச் செய்ய முன்வரப் போவதில்லை.

வடக்கு - கிழக்கு மக்களை யுத்த சூழலுக்குள் தள்ளிவிட்டு, வடக்கு கிழக்கை மட்டுமல்ல தென்பகுதியையும் கூட உங்களால் அபிவிருத்தி செய்யமுடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்றுமுன்தினம் நாடாளு மன்றத்தில் எச்சரிக்கை விடுத்தார்.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு விவாதத்தில் உரையாற்றும் போதே சுரேஷ் பிரேமச்சந்திரன் இப்படிக் கூறினார்.

வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்திக்குப் பலகோடி ரூபாவை ஒதுக்கி உள்ளதாக கூறுகின்றீர்கள். அப்பணம் யுத்த நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படமாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம் என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பினார்.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்த வரவு- செலவுத் திட்டம் நடைமுறையில் எய்துவதற்கு அசாத்தியமான இலக்குகளைக்கொண்ட அரசியல் நோக்குடைய ஒன்று.

நாட்டில் இருக்கின்ற வளங்களைக் கொண்டு இதில் குறிப்பிடப்பட்டுள்ள 8 சதவீத பொருளாதார வளர்ச்சியையோ, வேலை வாய்ப்பு அதிகரிப்பு, தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் போன்ற இலக்குகளையோ எய்துவது மிகவும் கடினம்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை புதிய ஜனாதிபதியின் கீழான இந்த அரசு காத்திரமான எதனையும் செய்யக்கூடிய நிலையில் இல்லை.

ஒற்றையாட்சிச் சிந்தனைக் குட்டைக்குள் ஊறிநின்று, ஏற்கனவே முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளில் இணங்கப்பட்டவற்றைப் புறம்தள்ளி, மீண்டும் ஆரம்பத்திலிருந்து சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கப் போகிறீர்கள் எனக் கூறுகிறீர்கள்.

ஆனால், நடைமுறைச் சாத்தியமற்ற - யதார்த்தத்தை உணர்ந்துகொள்ள மறுக்கின்ற - அரசியல் அணுகுமுறைகளால் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லமுடியாது.

சமாதானத்தை ஏற்படுத்துவதாக வாயளவில் பேசிக்கொண்டு மொத்த செலவினத் தில் சுமார் 15 வீதத்தைப் பாதுகாப்புக்கு ஒதுக்கியுள்ளதன் மூலம் அரசாங்கம் எத்த கைய திசையில் நகர முனைகிறது என்பதை உணர்ந்துகொள்ள எவருக்கும் விசேடமான நுண்ணறிவு தேவையில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை யுத்த சூழ்நிலைகளுக்குள் அவர்களைத் தள்ளி அடக்கி ஒடுக்க முனையும் திட்டத்தின் ஆரம்ப அறிகுறியாகவே இவ்வரவு- செலவுத் திட்டத்தை அவர்கள் காண்கின்றனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணாமல் எந்த ஒரு பொருளாதாரத் திட்டமும், நாட்டின் வடக்கு - கிழக்குப் பிரதேசங் களுக்கு மட்டுமன்றி, தென்பகுதிக்கும் எந்த ஒரு நன்மையையும் பெற்றுத் தரப் போவதில்லை. வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்காக 650 மில்லியன் டொலர் வெளிநாட்டு உதவி பெறப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. அத்தோடு அரச நிதியங்கள் மூலம் ஆண்டொன்றுக்கு ரூபா



நாலரை பில்லியன்கள் ஒதுக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. இவை வடக்கு - கிழக்கு வாழ் மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னேற்றும் நோக்கில் செலவிடப்படும் எனக் கூறப் பட்டுள்ளது. இப்பிரதேசங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனருத்தாரண நடவடிக்கைகளுக்காக முன்மொழியப்பட்ட பொதுக் கட்டமைப்பையே இன வாதிகள் நீதிமன்றம்வரை சென்று தடுத்துவிட்ட சூழலில், இம்மக்களின் நலன்கருதி நடைமுறைச் சாத்தியமான திட்டங்களை எவ்வாறு அமுல்படுத்தப் போகின்றீர்கள்?

வடக்கு- கிழக்கு மக்களை யுத்த சூழலுக்குள் தள்ளிவிட்டு எவ்வாறு அப்பிரதேச அபிவிருத்தியை முன்னெடுப்பது? எவ்வாறு இப்பிரதேச மக்களின் வாழ்வு நிலையை பயன்வாய்ந்த விதத்தில் முன்னேற்றத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தப் போகிறீர்கள்.

ஏற்கனவே வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் உள்ள பொருளாதார வளங்கள் - குறிப்பாக கடல்வளம், விவசாய நிலங்கள், மக்கள் குடியிருப்புப் பகுதிகள் என்பன - இராணுவக் கட்டுப்பாட்டு உயர் பாதுகாப்பு வலயங்களாக மக்கள் பயன்பாட்டுக்கு மறுக்கப்பட்ட நிலை உள்ளது. அப்படி இருக்கை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நாம் ஏற்றுள்ள அமைச்சர் பதவிகள் சப்பி வீசப்பட்ட எலும்புத் துண்டுகள் அல்ல

## விளக்கம் கூறுகின்றார் ரிஷாத் பதியுதீன்

நாங்கள் அரசிடமிருந்து பெற்றிருக்கும் அமைச்சுப் பதவிகள் உடுத்துக்களையும் ஆடைகள் போன்றவை. அவற்றை நிரந்தரமாக வைத்துக்கொள்ளவோ அல்லது அவற்றின் மூலம் தனிப்பட்ட எங்களின் வாழ்வை மேம்படுத்தவோ நாம் எண்ணவில்லை.

முஸ்லிம்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற கொள்கையை முன்வைத்தே இந்த அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்டுள்ளோம்.

முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலிருந்து என்று இந்த அரசு நழுவுகின்றதோ அன்று இந்த அமைச்சுப் பதவிகளை ஆடைகள்போல் கழற்றி வீசிவிட்டுப் போய்விடுவோம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் சொல்வதுபோல் நாம் பெற்றிருக்கும் அமைச்சுப் பதவிகள் சப்பி வீசப்பட்ட எலும்புத் துண்டுகள் அல்ல. மக்களுக்கு சேவைசெய்யப் பெறப்பட்ட ஒரு சக்தி.

- இவ்வாறு கூறினார், மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷாத் பதியூதீன். நேற்று நாடாளுமன்றில் வரவு - செலவுத்திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இந்த நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக முஸ்லிம்கள் அதிகம் பாதிக்கப்பட்டனர். இதனால் இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் 15 வருடங்களாக இன்னும் அகதி முகாம்களில் வாழ்கின்றனர்.

இவர்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும். இவர்களுக்கான அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்பட வேண்டும். இவ்வாறான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றால் நாட்டில் சமாதானம் உருவாக வேண்டும். அதற்கான சாத்தியப்பாடுகளை ஏற்படுத்த வேண்டும்.

இச்சமாதானத்தை கூடிய விரைவில் உருவாக்கவேண்டும் என்ற நோக்கிலேயே நாம் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எமது ஆதரவை வழங்கினோம். மக்களுக்குச் சேவை செய்ய அமைச்சுப் பதவிகளையும் பெற்றோம்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த அரசும், விடுதலைப் புலிகளும் அதிக பங்களிப்புகளை வழங்க வேண்டும்.

கிழக்கில் இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் நிறுத்தப்பட வேண்டும். இச்சம்பவத்திற்குக் காரணமானவர்கள் யாரெனக் கண்டுபிடிக்க அரசு ஆணைக்குழுவொன்றை அமைக்கவேண்டும்.

வடக்கு-கிழக்கில் இடம்பெற்றுவரும் சம்பவங்களால் மீண்டும் ஒருமுறை யுத்தம் ஏற்படுமோ என்ற அச்சம் நிலவுகிறது. மீண்டும் இரத்த ஆறு ஓட யாரும் அனுமதிக்கக்கூடாது.

நிரந்தர சமாதானத்தை உருவாக்க நாம் தொடர்ந்தும் எமது ஆதரவை வழங்குவோம். அதேவேளை, முஸ்லிம்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டாலோ அல்லது தீர்வு முற்றாக மறுக்கப்பட்டாலோ நாம் எமது மக்களுக்காக இந்த அமைச்சுப் பதவிகளைத் தூக்கி வீசத் தயார்.

- இவ்வாறு அவர் கூறினார்.

# கிழக்கு வன்முறைச் சம்பவங்களுடன் 3 அமைச்சர்களுக்குத் தொடர்பா?

## மு.கா.வின் ஹஸன் அலி கேள்வி

கிழக்கில் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் வன்முறைச் சம்பவங்களுடன் ஆளுங்கட்சியில் உள்ள முஸ்லிம் அமைச்சர்கள் தொடர்புபட்டிருக்கிறார்கள் எனக் கூறப்பட்டுவருவது குறித்து அரசு அதன் உண்மை நிலையை வெளிப்படுத்த வேண்டும்.

மூன்று அமைச்சர்கள் மற்றும் சில உயரதிகாரிகள் கிழக்கில் சட்ட விரோதமாக இயங்கும் ஆயுதக்குழுக்களுடன் தொடர்புபட்டிருக்கிறார்கள் என பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியுள்ளன. இது தொடர்பான உண்மை நிலையைத் தெளிவுபடுத்தி பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தின் ஊடாக அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெளிவுபடுத்த வேண்டும்.

இவ்வாறு கேட்டுக்கொண்டார், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினரும் செயலாளருமான எம்.டி.ஹஸன் அலி.

நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு கிழக்கில் வன்முறைச் சம்பவங்கள் அரங்கேறி விட்டன. அங்கு தமிழ் - முஸ்லிம் மக்களின் உறவு சீர்குலைந்துபோகும் அபாயம் தோன்றியுள்ளது.

அங்கு பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், சமாதானத்தை நிலைநாட்டவும் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும். சட்டங்களை உருவாக்குவதன் மூலமாகவும், விதிகளை அமைப்பதன் மூலமாகவும் ஒருநாடு அபிவிருத்தி அடைந்துவிடாது. நிலையான சமாதானத்தை உருவாக்குவதன் மூலமே இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும்.

தாம் ஒரு தனிக்கட்சியைச் சேர்ந்தவர் அல்லர் என்றும் இந்த நாடு முழுவதற்கும் சொந்தமானவர் என்றும் தமது பதவியேற்பு வைபவத்தில் உரையாற்றும்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார். அதை அவர் நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் மஹிந்த ராஜபக்ஷ சமாதானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

(த-3)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

104 SRI தொடர் இலக்கம் L.M.L வெஸ்பா, பட்டர் கலர் ஸ்கூட்டரும் பென்டியம்-3 கொம்பியூட்டரும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 6512934. (44097)

### கடை விற்பனைக்கு

இல.305/1, ஸ்ரான்லி வீதியில் சகல வசதிகள் கொண்ட 3 மாடி கடை விற்பனைக்குண்டு. (42 அடி நீளமும் 12 அடி அகலமும்). தொடர்பு: T.P.No.: 077 6158802, 2227674, 0779007827. (44130)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Original Prima சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (44090)

### தேவை

வெளிநாட்டில் புத்தக கண்காட்சிக்கு இலங்கை எழுத்தாளர்களின் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், நாவல்கள், ஆய்வுகள் 5 பிரதிகள் தேவை. இலங்கையில் அச்சுப்பதிவு பெற்றதாக இருக்கவேண்டும். பிரதிகள் உரிய விலைக்கு கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: 0112331475, 077-345666. (சி/46796)


**உடன் வேலைவாய்ப்பு**

**வெயிட்டர், சமையல் ஆள்கள், சமையள் உதவியாளர்கள் தேவை.**
**தொடர்பு:**
**SKY LINE RESTAURANT**
198, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 - 2227539
(44141)(32-11-17)



**வெளிவந்துள்ளது**

புதிய பொது அறிவு
10 வருட அனுபவமிகு ஆசிரியர்
**திரு.வே.தபேந்திரன்**
அவர்களின் உருவாக்கம்
SLAS சகல பேரட்டிப் பரீட்சைகளுக்கும் உரியது.
பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
**சிறீலங்கா புத்தகசாலை**
234, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2573
(சி/46794)(21-32-11-17)



நாட்டில் உருக்குக் கட்டுமானப் பணிகளில் முன்னணியில் திகழும் நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் வேலைகள் தொடர்பான வடக்கு-கிழக்கில் இருந்து
**உப ஒப்பந்தக்காரர்கள்** தேவை
வெளிவாசல் கதவு (GATE) உற்பத்தியாளர்கள்
மின் ஒட்டுனர்கள்
தயவு செய்து உங்கள் விவரங்களைக் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.
**விளம்பர இல. 2766**
**உதயன் பணிமனை**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
(44129)


### கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பழைக் கோட்டத்தில் யா/அளவெட்டி வடக்கு அ.மி.த.க. பாடசாலையில் அதிபராக கடமைபுரியும் திருவாளர் அ.இரங்கநாதனின் தந்தை

**இராமலிங்கம் அம்பலவாணர்**

காலமான செய்தியை அறிந்து அன்னாரின் குடும்பத்தவர்களின் துயரில் பங்குகொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(44131)(26-19-11) தெல்லிப்பழைக் கோட்ட அதிபர் சங்கம்.

### தவறிவிட்டது

ஜெயபாலசிங்கம் ஜெகதீஸ்வரன் என்பவரது தேசிய அ.அட்டை (801681603V ) 07.12.2005 அன்று கோப்பாய்க்கும் வல்லை வெளிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உடுவில் கிழக்கு, சுன்னாகம் கற்பகப்பிள்ளையார் கோயிலடி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (44096)

832763764V இலக்கமுடைய சிவானந்தன் கமல்ராஜ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் 41/12, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு ஒப்படைக்கவும். T.P.: 0776120570 OR 0779179905 (44134)

முத்தையன்கட்டைச் சேர்ந்த சுப்பிரமணியம் துரைசிங்கம் என்பவருடைய தே.அ. அட்டை (580811671V), தொழில் அட்டை மற்றும் ஒரு தொகைப் பணம் அடங்கிய பேர்ஸ் சுன்னாகத்தில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் 0776 567677 TP இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (44115)

## கலந்துரையாடல்

குடத்தனை,டிசெ.16

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிற்கான கால்நடை வளர்ப்புச் சங்கத்தைப் புனரமைப்பது தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வு புதிதாக அமைக்கப்பட்ட கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-78)

## லயன்ஸ் கழகக் கிளை அங்குரார்ப்பணம்

தென்மராட்சி,டிசெ.16

தென்மராட்சிப் பகுதியில் லயன்ஸ் கழகக் கிளையின் ஆரம்ப நிகழ்வு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி, மாவட்ட, பிராந்தியத் தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-117)

## மக்கள் உதவியுடன் வீதி திருத்தம்

புங்குடுதீவு,டிசெ.16

புங்குடுதீவு வைத்தியசாலை வீதி, வைத்தியசாலையின் அபிவிருத்தி சங்கத்தினரால் மக்களின் பங்களிப்புடன் புனரமைக்கப்பட்டு வருகிறது என சங்கத்தின் தலைவர் சு.கருணாகரன் தெரிவித்தார்.

இவ்வீதி குண்டும் குழியுமாகக் காணப்பட்டது. இவ்வீதியால் பயணம் செய்வோரும் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களும் பெரும் சிரமம் அடைந்தனர்.

இவ்வீதி புனரமைப்பு வைத்திய அபிவிருத்திச் சங்கத்தினரால் மக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-ரி-204)

### நீரிழிவு நோய் பற்றிய கருத்தரங்கு

இடம் : வீரசிங்கம் மண்டபம் (யாழ்ப்பாணம் கூட்டுறவுச்சபை, மண்டபம்)
இல.12.கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: 18-12-2005 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி

நோயுள்ளோர் மட்டுமன்றி நோயற்றோர், மாணவர்கள், ஆர்வலர்கள் எத்தரப்பினராயினும் இந்த இலவச அறிவூட்டல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வெளியிடப்படும் நூலினையும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

இங்கு யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவர்கள் மற்றும் துறைசார்ந்தவர்கள் நோய் பற்றிய விளக்கங்களை அளிக்கவிருப்பதுடன் உங்கள் வினாக்களுக்கும் பதில்தரவுள்ளனர். உங்களுக்காகவே நடத்தப்படும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பயன்பெறுங்கள்.

(44127)(26-19-11) -ஏற்பாட்டாளர்கள்.

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலட்சுமி ஸ்ரோர்ஸ் உரிமையாளரும் மட்டுவில் - நுணாவில் வணிகர் மன்றம், நுணாவில் வீரபத்திரர் ஆலய பரிபாலனசபையின் தலைவரும் பொதுஅமைப்புகள் சிலவற்றின் உபதலைவருமான

**திரு.சுப்பிரமணியம் பூபாலசிங்கம்**

அவர்கள் கடந்த 2005.12.06 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்தமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதோடு, மென்மேலும் உயர்ச்சி பெறவும் வாழ்த்துகின்றோம்

(44139)(21-32-11-17) ச.தங்கேஸ்வரன் குடும்பம்,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

## ஓராண்டு நினைவஞ்சலி



**மௌனகுரு செல்வகுரு**
**(செல்லாண்டி)**
(நெடியகாடு வல்வெட்டித்துறை)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01-12-1958 | 27-12-2004 |

எம் இமயம் மறைந்து - ஆண்டு
ஒன்று ஆனதோ - மறையவில்லை
ஐயா உம் முகம் - மறக்கவில்லை
ஐயா உமது சேவைகளை
கணபதி மின் அமைப்பாளனாய்
கணபதி படிப்பகத்தின் காவலனாய்
நெடியகாட்டின் நெறியாளனாய்
கலாமன்றத்தின் கலைஞனாய்
நீங்கள் பதித்த தடங்கள் மறையவில்லை
ஐயா நீங்கள் மட்டும் மறைந்ததேனோ?
சந்ததிகள் பல வந்தாலும் - சரித்திரங்கள்
பல தோன்றினாலும் - காலங்கள்
சொல்லும் ஐயா நீங்கள் எமக்கு
ஆற்றிய சேவைகளை.

காலங்கள் உள்ளவரை என்றும் உங்கள் நினைவுடன்,
கணபதி மின் அமைப்பாளர்கள்,
கணபதி படிப்பகம்,
நெடியகாடு இளைஞர் வி.கழகம்,
நெடியகாடு மோர்மட வரவேற்புக்குழு.

(44138) (24-32-11-17)


**பெற்றா எசன்ஸ் சப்ளையர்ஸ்**

அச்சகப் பேப்பர் வகைகள், அதற்குரிய மைவகைகள், ஓவ்செற் வேலைகளுக்குப் பாவிக்கும் கெமிக்கல் வகைகள், பிறிஸ்டல் போட், சிப்போட், பொக்ஸ்போட், பைல்வகைகள், திருமண அழைப்பிதழ்கள், கேக் பொக்ஸ், (திருமணம்) மற்றும் ஸ்ரேசனறிஸ், கணனி காகிதாதி வகைகள், றிபன், புளொப்பி டிஸ்க் வகைகள் என்பவற்றை தரமாகவும் நியாயமான விலையிலும் பெற்றுக்கொள்ள யாழ்நகரில் முதன்மை ஸ்தாபனம்.

**பெற்றா எசன்ஸ் சப்ளையர்ஸ்**
104,ஆஸ்பத்திரி, வீதி யாழ்ப்பாணம். தொ.பே.:021 222 2386

குறிப்பு: பெற்றா எசன்ஸ் அன்ட் பேப்பர் மேர்ச்சன்ட் இரண்டும் **No.104,** ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் மட்டும் இயங்குகின்றது என்பதை எங்கள் அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம். எனவே பேப்பர் மேர்ச்சன்ட் தொடர்புகள் அனைத்தையும் **பெற்றா எசன்ஸ் சப்ளையர்ஸில் மட்டுமே வைத்துக் கொள்ளவும்.**

(சி/46795)

# முல்லைத்தீவு விவசாயத் திணைக்களத்தில் ஆளணிப் பற்றாக்குறை, வசதிக் குறைபாடு

## விவசாயிகளுக்கான விரிவாக்கல் பணிகள் பாதிப்பு

புதுக்குடியிருப்பு,டிசெ.16

முல்லைத்தீவு மாவட்ட விவசாய விரிவாக்கல் திணைக்களத்தில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையால் அதன் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு பெரிய விவசாய மாவட்டமாக இருக்கின்றபோதும் விவசாய விரிவாக்கல் திட்டத்திற்குரிய ஆளணியினரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படாமையால் பெரும் நெருக்கடிகளைத் திணைக்கள அதிகாரிகள் அனுபவிக்கின்றனர்.

இம்மாவட்டத்திற்கு இரண்டு விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்கள் நியமிக்க வேண்டியுள்ள சூழ்நிலையில் எவருமே இதுவரை நியமிக்கப்படவில்லை. 4 பாடவிதான உத்தியோகத்தர்கள் கடமையாற்ற வேண்டியுள்ளபோதும் மூவரே தற்போது கடமையாற்றுகின்றனர். வெளிக்களப் போதனாசிரியர் 13 பேர் தேவைப்படுகின்றனர். ஆனால் 7 பேர் மட்டுமே கடமையிலுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.


இத்திணைக்களத்தின் கட்டடம் கடந்த கால அனர்த்தங்களால் முற்றாகச் சேதமடைந்தது. பின்னர் கடந்த வருடம் 'நீர்ப்' திட்டத்தின் கீழ் இதற்கென புதிய கட்டடம் அமைக்கப்பட்டது. அதுவும் கடந்த வருட இறுதியில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் சேதமடைந்தது.

இந்தச் சூழ்நிலையில் எந்தவித அடிப்படை வசதிகளும் இன்றி தற்போது தனியார் ஒருவருடைய கட்டடத்தில் இத்திணைக்களம் இயங்கிவருகிறது.

அதேவேளை, ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் தங்குவதற்குரிய விடுதி மற்றும் இதர வசதிகள் எவையும் செய்து கொடுக்கப்படாமையால் அங்கு பணிபுரிவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த விரிவாக்கல் திணைக்களத்தின் கீழ் சுமார் 11 கமநல சேவை நிலையங்கள் உள்ளன. விவசாய விரிவாக்க நிலையத்தின் மூலம் முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு வேண்டிய சேவையை வழங்க இந்த அலுவலகத்தில் காணப்படும் அவல நிலையை நீக்க சம்பந்தப்பட்ட தரப்புகள் முன்வர வேண்டும் என விவசாயிகள் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

(த-6-353)



கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கல்மடுநகர் கிராம சேவகர் பிரிவில் கடந்தவாரம் நடமாடும் காணிப்பதிவக சேவை நடத்தப்பட்டது. அந்த நடமாடும் சேவையின் போது எடுக்கப்பட்ட படம் இது. (படம்:வட்டக்கச்சிச் செய்தியாளர்)

## சிறப்புற நடந்த ஒளிவிழா நிகழ்வுகள்

முழங்காவில்,டிசெ.16

வன்னிப்பாடசாலைகளில் ஒளிவிழா நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன.

வேரவில் இந்துமகாவித்தியாலய ஒளிவிழா பாடசாலை அதிபர் எஸ்.ரி.இளங்குமரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பூநகரி உதவி அரச அதிபர் மா.ஸ்ரீஸ்கந்தகுமாரும் சிறப்பு விருந்தினர்களாக வலைப்பாடு பங்குத்தந்தை வசந்தசீலன், வலைப்பாடு றோ.க.த.க.பாடசாலை அதிபர் சு.செல்வரத்தினம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மாணவர்களது கலைநிகழ்வுகளும் இந்த நிகழ்வில் இடம்பெற்றன. (த-323-203)

***

வலைப்பாடு றோ.க.த.க.பாடசாலையின் ஒளிவிழா பாடசாலை அதிபர் சு.செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வலைப்பாடு பங்குத்தந்தை வசந்தசீலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினார். (த-323-203)

***

இரணதீவு றோ.க.த.க.பாடசாலையின் ஒளிவிழா கடந்த 8ஆம் திகதி பாடசாலை அதிபர் ஏ.ஜெயசீலன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. (த-323-203)

***

குமுழமுனை அ.த.க.பாடசாலையின் ஒளி விழா கடந்த 6ஆம் திகதி பாடசாலை அதிபர் யோன்கெனடி தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக குமுழமுனை, நாச்சிக்குடா பங்குத்தந்தை பாஸ்கரன் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார்.

தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (த-323-203)

***

முழங்காவில் மகாவித்தியாலய ஒளிவிழா கடந்த 7ஆம் திகதி பாடசாலை அதிபர் பா.சிவராசா தலைமையில் நடைபெற்றது.

பங்குத்தந்தை யஸ்ரின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஆசியுரைவழங்கினார். (த-323-203)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கம் உதவி

கிளிநொச்சி,டிசெ.16

அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிசொச்சிக் கிளை 7 மில்லியன் ரூபா பெறுமதியான உதவிப் பொருள்களை வழங்கியுள்ளது.

கண்டாவளை, பூநகரி மற்றும் பளை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா வீதம் 2 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. கனேடிய செஞ்சிலுவை நிதி மூலம் 573 குடும்பங்களுக்கு 5 மில்லியன் ரூபா பெறுமதியான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வுதவிகள் உணவு, உடை மற்றும் வீட்டு உபகரணங்கள் அடங்கிய பொதிகளாக வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சியில் வசிக்கும் 104 குடும்பங்களுக்கும் இவ்வுதவிகள் வழங்கப்படுகின்றன என.செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக் கிளைச் செயலாளர் சு.கணேஸ் தெரிவித்தார். (த-6-301)

### தேசிய ரீதியில் நடத்தப்பட்ட

## நாடகப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் புலிகளால் கௌரவிப்பு

கிளிநொச்சி,டிசெ.16

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கலைத்துறைப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்கள் கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சியில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

தமிழீழ மாணவர் அமைப்பு, தமிழீழக் கல்விக் கழகம் மற்றும் அரசியல்துறையினர் இணைந்து தூயவன் அரசறிவியல் கல்லூரி மண்டபத்தில் இந்தக் கௌரவிப்பை நடத்தினர்.

தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கலைஞர்களைக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் பாராட்டுரைகளைத் தமிழீழக்கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன், தூயவன் அரசறிவியல் கல்லூரி முதல்வர் அரசண்ணா மற்றும் கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் த.குருகுலராஜா ஆகியோர் நிகழ்த்தினர்.

தேசியமட்ட உலக சுற்றாடல் தின நிகழ்வில் முதலிடம் பெற்ற கிளிநொச்சி மத்திய கல்லூரி கலைஞர்களும் தமிழ் மொழி கலைத்திறன் போட்டியில் முதலிடம் பெற்ற கிளிநொச்சி மகாவித்தியாலய கலைஞர்களும் வடக்கு-கிழக்கு நாடக மட்டத்தில் 'சுனாமி மீள் எழுகை' பற்றிய நாடகப்போட்டியில் முதலிடம் பெற்ற நாடகக் கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர். தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் இந்நிகழ்வில் சிறப்புரையாற்றினார். (த-301)

## கீரிசுட்டான் கிராமத்தில் அபிவிருத்திப் பணிகள்

புளியங்குளம், டிசெ. 16

வவுனியா வடக்கு கீரிசுட்டான் கிராமத்தில் 'டெனிஸ்' அகதிகள் பேரவை நிறுவனத்தால் தலா 23 ஆயிரம் ரூபா செலவில் 29 குடும்பங்களுக்கு மலசலகூடம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. 20 ஆயிரம் ரூபா வீதம் 25 குடும்பங்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக் கடனும் வழங்கப்பட்டுள்ளது. ரூபா 4 லட்சத்து 50 ஆயிரம் செலவில் அங்குள்ள விவசாய வீதி புனரமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டங்களை வவுனியா தமிழர் புனர்வாழ்வுக்கழகம் செயற்படுத்துகிறது. 2006ஆம் ஆண்டு மேலும் பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் தெரிவிக்கப்படுகிறது. (த-355)

## ஆசிரியர் பயிற்சி நிலையம் முள்ளியவளையில் ஆரம்பம்

முள்ளியவளை புதறிக்குடாப் பகுதியில் 'ஜேர்மனி ஏ.பி.சி. பவுண்டேசன்' நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட ஆரம்பப்பள்ளி, முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடத் திறப்பு விழா அண்மையில் தமிழர் புனர்வாழ்வுக்கழக சிறுவர் நலப் பிரிவுப் பணிப்பாளர் ரவி தலைமையில் நடைபெற்றது. இத்திறப்பு விழாவில் ஈகைச் சுடரினை ஏ.பி.சி.பவுண்டேசன் பிரதிநிதிகள் ஏற்றி வைத்ததுடன் புதிய கட்டடத்தினை நாடா வெட்டித் திறந்து வைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றி வைத்தார்.

இந்தநிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயலத்ஜெயவர்த்தனாவும் கலந்துகொண்டார். (த-6-353)

## கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்கள் 110பேருக்கு உள்ளக இடமாற்றம்

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான 2006 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்குள் 110 ஆசிரியர்களுக்கு இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆசிரியர்களைத் தமது பாடசாலைகளில் பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டு புதிய பாடசாலைகளில் 2006ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்குமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா அறிவித்துள்ளார். (த-405)




## உணவு நிலையங்களில் பணிபுரிவோருக்கு மருத்துவ அடையாள அட்டை அவசியம்

புளியங்குளம்,டிசெ.16

முல்லைத்தீவு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனையினரால் தமது எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள உணவு கையாளும் நிலையங்களில் பணிபுரிவோருக்கு மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள உணவு கையாளும் நிலையங்களில் பணிபுரியும் அனைவரும் தவறாது மருத்துவ பரிசோதனை செய்து அடையாள அட்டை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று முல்லலத்தீவு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

மேலும் இனிவரும் காலங்களில் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அடையாள அட்டைகள் வைத்திருப்போர் மட்டுமே உணவு கையாளும் பணிகளில் ஈடுபட முடியுமெனவும் சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க. தவராசா தெரிவித்தார். (த-355)



கனகராயன்குளம் உபதபாலகத்தையே படத்தில் காண்கிறீர்கள். நிரந்தரக் கட்டடம் இன்றி பல்வேறு வசதியீனங்களுடன் தற்காலிகக் கொட்டகை ஒன்றில் இயங்குகிறது இந்த உபதபாலகம். (படம்: புளியங்குளம் செய்தியாளர்)

## கதிர்காமரின் இடத்துக்கு அழக்கப்பெருமா நியமனம்

கொழும்பு, டிசெ. 16

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மறைவையடுத்து ஏற்பட்ட -ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் - தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்துக்கு முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினரான டலஸ் அழகப் பெருமாவை நியமிப் பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துவிட்டார்

இதன்படி டலஸ் அழகப்பெருமவின் பெயரை சிபாரிசு செய்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான சுசில் பிரேம்ஜயந்த நேற்று முன்தினம் தேர்தல் ஆணையாளருக்குக் கடிதமொன்றை அனுப்பினார். இதற்கமைய எதிர்வரும் நாள்களில் ஏதாவதொரு தினத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக டலஸ் அழகப்பெரும சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார்.

முன்னதாக இந்த வெற்றிடத்துக்கு ஆனந்த சங்கரி, ரெஜினோல்ட் குரே, சந்தன கத்ரியாராச்சி ஆகியோரின் பெயர்களும் சிபாரிசு செய்யப்பட்டிருந்தன.

சுதந்திரக்கட்சியின் தல்லவியும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவே ஆனந்த சங்கரியின் பெயரை சிபாரிசு செய்திருந்தார்.

சந்திரிகா ஆஸ்திரேலியாவிற்கான தனிப்பட்ட பயணமென்றை மேற்கொண்டு நாட்டிலிருந்து புறப்பட்ட பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(எ-3)

## எஸ்.பியை விடுவிக்கக்கோரி ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு,டிசெ.16

சிறைத்தண்டனை அனுபவித்துவரும் ஐக்கியதேசியக்கட்சியின் தேசிய அமைப்பாளரான எஸ்.பி. திஸநாயக்கவை விடுதலை செய்யக்கோரி ஐ.தே.கட்சி உப தலைவர் கரு ஜயசூரிய, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

எஸ்.பி. திஸநாயக்கவின் உடல் நலம் பாதிக்கப்பட்டிருப்பதோடு அவரின் குடும்பத்தினரதும் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளது. இவர் கைது செய்யப்பட்டு ஒரு வருடமாகி விட்டது.

நாட்டின் முன்னேற்றத்தையும் எஸ்.பி. திஸநாயக்கவின் குடும்ப நிலையையும் கருத்திற்கொண்டு அவரை விடுதலை செய்யவேண்டும்.

மேலும் எஸ்.பி. திஸநாயக்கவை விடுதலை செய்யக்கோரி முன்னாள் ஜனாதிபதிக்கு எவ்வளவு கோரிக்கை விடுக்கப்பட்டும் உரிய நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட வில்லை. - இப்படி அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## ஆழிப்பேரலை பாதித்த கூ.சங்கங்களுக்கு நிதி உதவி

கொழும்புத்துறை, டிசெ.16

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி வழங்க இலங்கைத் தேசிய கூட்டுறவுச் சபை முன்வந்துள்ளது.

கடந்த காலயுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட கூ.சங்கங்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான ஆலோசனைக் கூட்டமொன்றை வவுனியாவில் நடத்துவதற்கு இலங்கைத் தேசிய கூட்டுறவுச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கூ.சங்கங்களுக்கு சுமார் 18 லட்சம் ரூபாவை வழங்க தேசிய கூட்டுறவுச் சபை ஒதுக்கீடு செய்துள்ளது.

இதேவேளை, இந் நிதி போதாதெனவும் மேலும்2லட்சம்ரூபாவை வழங்க வேண்டுமென வும் யாழ்.மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களின் தலைவர்களால் மாநாட்டில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ஒ-30)

## விபத்தில் 13 பேர் காயம்

மட்டக்களப்பிலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்ற பயணிகள் பஸ் மற்றுமொரு பஸ்ஸுடன் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு ஊரணிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)


### பாராட்டுகின்றோம்



பொறியியலாளராகப்
பதவி உயர்வு பெற்ற
**திரு.எஸ். சற்குணலிங்கம்**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*நிறைவேற்று பொறியியலாளரும்,*
*ஊழியர்களும்.*

**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**யாழ்ப்பாணம்.** (44084)



### UNIVERSITY OF JAFFNA, FACULTY OF ARTS

**MEDIA RESOURCES AND TRAINING CENTRE**

University of Jaffna will entertain applications from graduates for the under mentioned post up to 30th December 2005

**POST OF INTRUCTOR IN JOURNALISM (ON CONTRACT)**

Preference will be given to those who have

a) Good experience with print or electronic media or both
b) Followed/completed training in Journalism
c) Relevant degree

Salary Rs.10, 250 /- (Fixed) p.m
Rs.14,350/- (Fixed) p.m payable with effect from 1/1/2006

Note: In Addition to the above salary, the allowance approved by the University Grants Commission will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/Establishments, University of Jaffna Sri Lanka, for Rs.20/- per form, either in person or by sending a money order. Those who wish to obtain application forms by post are requested to send a Money order/ Postal order drawn in favour of the "Bursar, University of Jaffna" together with a self-addressed stamped envelop 23x30 cm in size

Applicants from the University system/Government Departments/Corporations and statutory Boards should Channel their applications through the Head of respective Institutions

Applications received after the closing date will be rejected without intimation. Only short listed applicants will be called for an interveiw.

REGISTRAR.
University Of Jaffna, Sri Lanka
2005.12.14 (C/48790)(21)



### கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் கணக்குப் பதிவாளர்
**செல்வி.இ.நகுலேஸ்வரியின்** அன்புத் தந்தையான

**வல்லிபுரம் இளையதம்பி**
(அராலி)

அவர்கள் 13-12-2005 அன்று காலமானதையிட்டு, அன்னாரின் பேரிழப்பால் துயரக்கடலில் மூழ்கியுள்ள குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியினைக் காணிக்கையாக்குவதுடன், அன்னாரின் ஆன்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி உரிமையாளர்கள்,
**தமிழரசி நகைமாடம்,**
முதன்மைச் சாலை, கிளிநொச்சி.

(44108)(26-17-21-15)



### பதவி வெற்றிடம்

சேவாலங்கா நிறுவனத்தின் கிளிநொச்சி சுனாமி அலுவலகத்தினால் முல்லைத்தீவு, மருதங்கேணி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் வீடமைப் புத் திட்டங்களில் கடமை புரிய பின்வரும் பதவிகளிற்கான விண்ணப்பங்கள் உடனடியாகக் கோரப்படுகின்றன.

01) தொழிற்நுட்ப உத்தியோகத்தர்.
தகைமை:- 1) N.C.T அல்லது அதற்கு சமமான கட்டட நிர்மாண தொழில் நுட்பக்கல்வி
2) 02 வருட தொழில் சார் அனுபவம்

02) வேலை மேற்பார்வையாளர்
தகைமை:- 1) க.பொ.த பத்திரம், (உயர்தரம்)
2) 02 வருட தொழில் சார் அனுபவம்.

விண்ணப்பங்கள் நேரடியாகவோ, பக்ஸ் மூலமாகவோ, கடிதமூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி:-

**பொறியியற் பிரிவு,**
**சேவாலங்கா மன்றம்,**
**சுனாமி காரியாலயம்,**
**இல:-72, திருநகர்,**
**கிளிநொச்சி.**

Fax No:- 021 2283957

**விண்ணப்பங்கள் சேர வேண்டிய இறுதித் திகதி :-21-12-2005**

(சி/46786)(26-15-17-21)



### பாராட்டி வாழ்த்துகின்றோம்

மட்டுவில்- நுணாவில் வணிகர் மன்றம், நுணாவில் வீரபத்திரர் ஆலய பரிபாலன சபை, நுணாவில் கிராமிய குழு,நுணாவில்சமுர்த்திச்சங்கம்ஆகியவற்றின் தலைவரும் சமுர்த்திமகாசங்கம், நுணாவில் விவசாய சம்மேளனம்ஆகியவற்றின் உபதலைவரும் சமுர்த்தி கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினருமான



**சுப்பிரமணியம் பூபாலசிங்கம்**

அவர்கள் கடந்த 05.12.2005 அன்று சாவகச்சேரி மாவட்ட நீதிபதி முன்னிலையில் அகிலஇலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்தமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நுணாவில் சந்தி,
சாவகச்சேரி.

**சங்கரலிங்கம் குடும்பம்.**
(44059)(51)



### UNIVERSITY OF JAFFNA

**FACULTY OF MEDICINE**
**DEPARTMENT OF BIO CHEMISTRY**
**SWEDISH INTERNATIONAL DEVELOPMENT AGENCY**

**INVITATION for BIDS**

**PROCUREMENT OF COLD ROOM WORKS**

1. Faculty of Medicine of the University of Jaffna, Thirunelvely has received a grant from the Swedish International Development Agency (SIDA) in Swedish Kronor (SEK) currency towards the cost of the Providing Cold Room facilities and intends to apply the proceeds of this grant to eligible payments under the contract for which **this invitation for BIDDING is issued.**
2. **Dean, Faculty of Medicine** of the University of Jaffna will receive sealed Bids for Providing Cold Room facilities to the **Bio-Chemistry Dept of the Faculty of Medicine** and receiving will be closed at **10.00 hrs** on **06.01.2006.**
3. Bids should be submitted on the forms available from **the office of the Dean, Faculty of Medicine of the University of Jaffna** up to - **22.12. 2005** on a payment of non-refundable fee of Rupees 2000/=.
4. Bidding is open to all supply contractors of prefabricated cold room units.
a) who could undertake to supply with the capacity to execute connected civil works:
b) have satisfactorily completed at least two similar contracts within the past five years which should be supported by certificates from clients and / or consultants.
Bidding documents may be inspected free of charge at **the Office of the Dean Faculty of Medicine , University of Jaffna during office hours.**
5. All bidders should have business registration and should have legal capacity to enter in to contract.
6. All bidders should have documents to prove that they have necessary professional, technical and organizational capacity, financial resources to perform this contract.
7. All bidders should have proven experience of supply and after sales requirements as specified in the bidding documents, including the satisfactory completion of similar contracts in the recent past.
8. Bids shall be valid up to **06.04.2006.**
9. All bids shall be accompanied by a Bid security for **Rs:150,000/=**
10. Deadline for submission of bids shall be **06.01.2006 before 10.00** hrs.
11. Sealed Bids shall be sent by registered post addressed to the Dean, **Faculty of Medicine, University of Jaffna, Kokuvil** or deposited in the tender box which shall be kept in the same address above on or before **10.00 hrs on 06.01.2006.**
12. Bids will be opened on **06.01.2006** immediately after closing tenders in the presence of the Dean, Faculty of Medicine at the office of the Dean, Faculty of Medicine, University of Jaffna., Kokuvil, Thirunelvely.
13. Bidders or their authorized representatives may be present at the opening of Bids.
14. For further details or clarifications, bidders may contact

**S.Ruthiralingam of Rudra Engineering & Architectural Consultancy Organization. No, 06, Nallur Cross Road, Jaffna.**

Telephone No - 021-222-5534: Fax No: 021-222-5534: e -mail: ruhlins @ yahoo.com

Registrar. **University of Jaffna**
**Jaffna.**
(C/46784)

# நோர்வேயின் பணி கடினமானது நோர்வேக்குப் பிரதியீடு இல்லை

## இன்றைய அரசியல்

அரசியல் ஆய்வாளர்
மு.திருநாவுக்கரசு



இலங்கையில் "சமாதானத்திற்கான" நோர்வேயின் பணி மிகவும் கடினமானதும் மாற்றீடற்றதுமாகும். ஒப்பந்தங்களை அல்லது உடன்பாடுகளை ஒருதலைப்பட்சமாகக் கிழித்தெறியும் அல்லது கைவிடும் சிங்கள அரசியல் கலாசாரத்தின் கீழ் ஓர் ஏற்பாட்டாளர் பணியை மேற்கொள்வது இலகுவான ஒரு காரியமல்ல.

### கைவிடப்பட்ட ஒப்பந்தங்கள்

உள்நாட்டு ரீதியில் கைச்சாத்தான பண்டா - செல்வா ஒப்பந்தத்தையும், டட்லி-செல்வா ஒப்பந்தத்தையும் முறையே பிரதமர்களாக இருந்த பண்டாரநாயக்காவும், டட்லி சேனநாயக்காவும் ஒரு தலைப்பட்ட சமாய்க் கிழித்தெறிந்தனர். உள்நாட்டு ரீதியான ஒப்பந்தங்கள் ஒருதலைப் பட்டசமாய் கைவிடப்பட்டதன் விளைவே வெளிநாட்டு ரீதியான மத்தியஸ்தங்களும் அனுசரணைப் பணிகளும் தோன்றக் காரணமாயின.

இறுதியாக நோர்வேயின் அனுசரணையுடன் ஆழிப்பேரலை நிவாரணப்பணிக்கான ஓர் உடன்பாட்டில் விடுதலைப் புலிகளுடன் சிங்கள அரசு ஓர் ஒப்பந்தத்தில் இவ்வாண்டு கைச்சாத்திட்டது. ஆனால், அடுத்து பதவிக்கு வந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அக்கட்டமைப்பை கைவிடுவதாக ஒருதலைப்பட்சப் பிரகடனம் ஒன்றைச் செய்துள்ளார். இனப்பிரச்சினைக்கு தான் ஒரு கௌரவமான அரசியல் தீர்வொன்றைக் காணப்போவதாக சுயவிளம்பரம் செய்துவரும் புதிய ஜனாதிபதியானவர் தமது கட்சியின் முன்னைய அரசினால் எற்கனவே கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தை தான் இப்போது மீறப்போவதாக அறிவித்துள்ளார். இப்படி ஒப்பந்தத்தை மீறுவது ஒரு கௌரவமான செயலல்ல. இப்படிப்பட்ட அரசியற் கலாசாரத்தின் கீழ் நோர்வேயின் பணி மிகவும் நெருக்கடிக்குரியது தான்.

கௌரவமான தீர்வைப்பற்றி பேசுவதற்கு முதல் தாம் செய்துகொண்ட ஒப்பந்தங்களை மதிக்கும் கௌரவத்தை நிருபிக்காத சிங்கள ஆட்சியாளர்களுடன் சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதோ, அனுசரணையாளர் பணியாற்றுவதோ "திருப்பாற்கடலில் அமுது கடையும்" முயற்சியாகவே இருக்கும்.

### நோர்வேயை அகற்ற விரும்பும் மர்மம்

நோர்வேயை அனுசரணையாளர் பணியிலிருந்து அகற்ற விரும்புவதன் மர்மம் என்ன? புதிய ஆசியக் கூட்டாளர்களின் அனுசரணை பற்றிப் பேசுவதன் சூக்குமம் என்ன? இவற்றை முற்றிலும் விஞ்ஞான பூர்வமாக நாம் விளங்கவேண்டியிருக்கின்றது.

அரசியல் விஞ்ஞான அரிச்சுவட்டின்படி இதனை விளங்குவதற்கு மூன்று வகைக் கண்ணோட்டங்கள் அவசியம். ஒன்று பூகோளமய (Global) அரசியற் கண்ணோட்டம், மற்றயது பன்னாட்டு (International) உறவுக் கண்ணோட்டம், மூன்றாவது உள்நாட்டுக் (National) கண்ணோட்டம். இத்தகைய ஆய்வுமுறை தனிச் சிறப்பான கவனத்திற்குரியது. இத்தகைய கருத் தோட்டத்தை அடிமனதில் வைத்துக் கொண்டு மேல் தெரியும் சில அம்சங்களை மட்டும் விவரிக்கவே இக்கட்டுரையால்முடியும்.

சர்வதேச உறவுமுறையின்படி ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் ஒரு வெளிநாடு சம்பந்தப்படும்போது முதலில் அதிகாரிகள்மட்டத் தொடர்பாகவே அது ஆரம்பமாகின்றது. பொதுவாகப் பார்க்குமிடத்து ஒரு நாட்டில் ஓர் அதிகாரி மூன்று வரு டங்களே பணியாற்ற முடிவது இயல்பு. அப்படி இனப்பிரச்சினை விவ காரத்தில் ஒரு வெளிநாடு சம்பந்தப்படுமிடத்து அதன் அதிகாரியை மூன்று வருடங்களுக்கு



ஏமாற்றிவிட்டால் இலங்கை அரசுக்குப் போதும். அவ்வாறு சிங்கள அரசு தம்மை ஏமாற்றுவதாக அவர் புரிந்துகொள்ளத் தொடங்கும் காலகட்டத்திற்குள் அவர் பணிமாற்றம் பெற்று விடுவார். பின்பு வேறு ஒரு புதியவர். பின்பு அவரை அடுத்த மூன்றாண்டுகள் ஏமாற்றுவது சாத்தியம் இதுவிடயத்தில் உளவியல் அணுகுமுறைகளுக்குள்ள பங்கை நிராகரிக்கமுடியாது. ஆனால், நோர்வேயைப் பொறுத்தவரை எரிக்சொல்ஹெய்ம் இக்கால வரம்பைத் தாண்டிகளத்தில் பங்கு வகிப்பவராய் உள்ளார். ஆதலால் அவரை களத்தில் இருந்து அகற்ற முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா உட்படப் பலரும் முயன்றார்கள். அது முடியாது போகவே தான் நோர்வே நாட்டையே களத்தில் இருந்து அகற்ற வேண்டும் என்ற முடிவிற்குச் சிங்கள ஆட்சியாளர்கள் வந்தனர்.

### ஆட்சியாளரின் அச்சம்

சிங்கள ஆட்சியாளர்கள் கூறுவ்து போல் சொல்ஹெய்மோ அன்றி நோர்வே அனுசரணையாளர்களோ பாரபட்சமான முறையில், புலிகளுக்குச் சார்பான முறையில் நடக்கிறார்கள் என்றில்லை. மாறாக சிங்கள ஆட்சியாளர்கள் நீதியற்று நடக்கின்றார்கள் என்பதை நோர்வே இராஜதந்திரிகள் அனைவரும் உணர்ந்துள்ளார்கள் என்பதே உண்மை. இவ்வாறு புரிந்துகொண்ட நோர்வேயின் புரிதலானது நோர்வே மூலம் பன்னாட்டரங்கிலும், உலக ரங்கிலும் ஸ்தாபிதமாகிவிடும் என்பதே சிங்கள ஆட்சியாளர்களின் அச்சமாகும். நோர்வேயை எதிர்ப்பதுடன் மட்டும் நின்றுவிடாமல் கூடவே மேற்குலகம் முழுவதையும் சேர்த்தே இவர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவதுடன் "ஆசிய நாடுகளின் அனுசரணை" என்ற கருத்தையும் முன்வைக்கிறார்கள். அது ஏன்?

மேற்குலக நாடுகளில் நிலவும் உள்நாட்டு அரசியல் நிலைவரங்களின்படி இனப்பிரச்சினைக்கான தீர்வாக அவர்கள் சமஷ்டி முறையை ஏதோ வழியில் பின்பற்றும் மனப்பாங்கைப் பெற்றுள்ளனர். அத்தகைய பின்னணியில் சமஷ்டி முறைக்கே எதிராக இருக்கும் சிங்கள ஆட்சியாளர் "ஏகாதிபத்திய எதிர்ப்பு" என்று ஒரு பொய்யான மாயாஜால வார்த்தையைக் கூறிக் கொண்டு மேற்குலக எதிர்ப்பு என்பதன் பேரில் ஒரு சமஷ்டித்" தீர்வையே எதிர்க்கும் நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார்கள். (சமஷ்டித் தீர்வுக்கும் அப்பால் தமிழ் பேசும் மக்களின் தேவை வளர்ந்துவிட்டது என்பது வேறுவிடயம்) மேற்குலகத்தின் சுரண்டல் பிற்போக்கானது தான். ஆனால் சமஷ்டி முறை பிற்போக்கானதல்ல.



### மன்னராட்சிக் கலாசாரம்

வரலாற்றுத் தர்க்கபூர்வப் போக்கின்படி இதுவரையான நோர்வேயின் பாத்திரம் தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தினது நீதிக்கான ஒரு சாட்சியாகும். நோர்வேயை சிங்கள அரசு நிராகரிப்பதன் மூலமும், கையெழுத்திட்ட ஆழிப்பேரலை கட்டமைப்பைத் தூக்கியெறிந்துள்ளதன் மூலமும் நோர்வேயின் பாத்திரம் தமிழ்பேசும் மக்களின் நீதிக்கான ஒரு சாட்சியமாய் காட்சியளிக்கின்றது.

"ஆசிய நாடுகள்" என்ற வார்த்தையை ராஜபக்ஷ தூக்கி நிறுத்துவதன் நோக்கம் என்ன? ஆசிய நாடுகளிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளேயாயினும் சரி, ஆசிய நாடுகள் அனைத்துமே நூதனசாலையில் வைத்திருக்கவேண்டிய மன்னராட்சிக் கலாசாரத்தைப் பின்பற்றுபவையாயுள்ளன. மன்னராட்சி முறையின் சிறப்பியல்புகளில் ஒன்றாய் அதிகாரக் குவிவு உள்ளது. ஆசிய நாடுகளின் கலாசாரத்தில் அதிகாரம் ஒரு போதையாகவுள்ளது. ஒற்றையாட்சி, அரைச் சமஷ்டி என்பனவெல்லாம் இத்தகைய அதிகார போதையின் உச்ச வெளிப்பாடுகள். இன ஒடுக்குமுறை இதில் தலையாய அம்சம். ஆதலால்தான் தமிழ் பேசும் மக்களுக்கெதிரான ஒடுக்கு முறைக்கு ஏதுவாக, துணையாக ஆசிய நாடுகள் என்ற போதையை ராஜபக்ஷ தேடுகிறார்.



### இந்தியாவும் ஜப்பானும்

அத்துடன் இதுவிடயத்தில் இந்தியா சிங்கள ஆட்சியாளரின் விருப்பத்தேர்வல்ல. தமிழருக்கெதிராகப் பயன்படுத்தப்படவல்ல தவிர்க்கமுடியாத ஒரு தெரிவாக இந்தியாவை ராஜபக்ஷ கருதுகிறார். ஜப்பான் அவர்களது விருப்பத்தேர்வில் ஒன்று. இலங்கைக்கான முன்மாதிரி நாடாகவும் இலங்கைக்குரிய முதலாவது வெளிநாட்டு நண்பனாகவும் ஜப்பானைத்தான் நவீன சிங்கள இனவாதத்தின் தந்தையான அநாகரிக தர்மபால 19ஆம் நூற்றாண்டில் தெரிவுசெய்திருந்தார். 1950களில் பண்டாரநாயக்க நவீன இனவாதத்தின் ஆட்சியாளராய் கட்டிலேறியபோது அநகாரிக தர்மபாலவின் வெளியுறவுக்கொள்கையை பின்பற்றமுடியாதளவிற்கு பனிப்போரில் ஜப்பானின் பாத்திரம் காணப்பட்டது. பனிப்போர் ஓய்ந்துள்ளநிலையில், இந்தியாவிற்கும் தமிழீழ போராட்டத்திற்குமான இடைவெளி விரிந்திருக்கும் நிலையில் ஜப்பானையும் அரசியல் அரங்கிற்குக் கொண்டுவர அநாகரிகாவின் மூன்றாவது தலைமுறை வாரிசான ராஜபக்ஷ விரும்புகிறார்.

இரண்டாவது உலக யுத்தத்தின்பின்பு நேரடி அர்த்தத்தில் வெளிநாடொன்றின் உள்நாட்டு நேரடி அரசியலில் பாத்திரம் வகிக்காது இருந்துவரும் ஜப்பான், இலங்கையின் உள்நாட்டரசியலில் பாத்திரம் வகிக்கத்தொடங்குவதன் மூலமே ஆசிய அரங்கில் தனது காலடியை எடுத்து வைக்க முயல்கின்றது என்ற கவலை இந்தியாவிடம் உண்டு. அதுவும் தனது வாசற்படி நாடொன்றில் இத்தகைய நிலை தோன்றுவதை இந்தியாவால் விரும்பமுடியாது. இதன்மூலம் ஒரு புதிய குழப்பமும் புதிய பரிமாணமும் இலங்கை அரசியலில் இப்போது ஏற்படத் தொடங்கியுள்ளது. இந் நிலையில் ராஜபக்ஷவின் ஜப்பான் மீதான மோகத்தைத் தடுப்பதற்காக இந்தியா ராஜபக்ஷவை மனங்குளிரச் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிடக்கூடாது என்பது தமிழ் பேசும் மக்களின் அடுத்த பிரச்சினையாகும்.

இத்தகைய பின்னணியில் நோர்வேயின் பாத்திரம் மட்டும்தான் நிலமைகளை சீர் கேடடையவிடாது பாதுகாக்கவல்லது. நோர்வேயின் இத்தகைய பாத்திரத்தை இந்தியாவும் ஆதரிப்பதாகத் தெரிவித்திருப்பது ஒரு முக்கிய விடயமாகும். இதை மீறவல்ல நிலைப்பாட்டை யார் எடுத்தாலும், நோர்வே இன்று வகிக்கும் பாத்திரத்தை யார் தடுத்தாலும் அவற்றால் நிலைமைகள் பாதகமடையவேமுடியும்.

---

# இலங்கை - இந்திய கூட்டு இராணுவ நடவடிக்கைகள்; புதுடில்லி தலைமையிடம் வைகோ கடும் ஆட்சேபம்

இலங்கை - இந்திய இராணுவங்கள் இணைந்து கூட்டுப் பயிற்சியில் ஈடுபடுவது தொடர்பாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜியிடம் தமிழ்நாட்டின் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலாளர் வைகோ தனது கவலையைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக 'தமிழ் நெட்' இணையத் தளத்துக்கு வைகோ அளித்துள்ள தகவல்கள் வருமாறு:-

யாழ். பலாலி விமான தளத்தைச் சீரமைப்பது தொடர்பாக ஊடகங்களில் செய்திகள் வெளியானமை குறித்து எனது கவலையை இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜியிடம் (கடந்த) திங்கட்கிழமை தெரிவித்தேன்.

இது குறித்துத் தாம் விசாரணை செய்யவிருக்கின்றார் என அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

விமானத்தள சீரமைப்புக்காக இந்திய நிதி உதவி இலங்கைக்குக் கிடைக்கின்றது. இந்திய அரசியல் தலைமைக்குத் தெரியாமலேயே இந்த நிதி இலங்கைக்குக் கிடைக்கின்றதா என்பது இனிமேல்தான் விசாரித்து அறியப்படவேண்டும்.

இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவைச் சிக்கவைக்க கொழும்பு பின்னும் சதி வலையில் இந்தியா சிக்காது என்றே நான் உறுதியாக நம்புகிறேன்.

நவாலி.. தேவாலயத்தின் மீது இலங்கை குண்டுவீசித் தாக்குதல் நடத்தி நூற்றுக்கணக்கான அகதிகளைக் கொன்று குவித்தபோது மறைந்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் உள்ளிட்ட சர்வதேச தலைவர்கள் தெரிவித்திருந்த கண்டனங்களையும் இந்திய அரசிடம் எடுத்துச் கூறினேன்.

இலங்கை இராணுவத்துக்கு ஒரு சிறு உதவி செய்தாலும் அது தமிழர்களுக்கு எதிரான போருக்கு உதவுவதாகவே இருக்கும் என்றும், அதை நியாயப்படுத்த முடியாது என்றும் தெரிவித்திருக்கிறேன்.

இலங்கை அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, இந்தியா வருவதற்கு முன்னதாக மீண்டும் இந்தியத் தலைவர்களை நான் சந்திக்கவுள்ளேன்.

இந்திய - இலங்கை இராணுவக் கூட்டு பயிற்சி நடவடிக்கை தொடர்பாகவும் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜியிடம் விளக்கம் கோரினேன். பாகிஸ்தான் தவிர்ந்த தெற்காசிய நாடுகள் பலவற்றுடன் மேற்கொள்ளும் வழமையான ஒரு கூட்டு நடவடிக்கையின் அங்கமே இது என்று பிரணாப் முகர்ஜி கூறினார்.

இலங்கையின் புதிய அரச தலைவர் மற்றும் அவரது கூட்டணிக் கட்சியினர் இந்தியா குறித்து தெரிவித்துவரும் கருத்துகளை நாம் ஏற்கவில்லை. நோர்வேயை ஓரம்கட்டிவிட்டு இந்தியாவை இழுப்பதற்கான அந்தப் பேச்சுகள் குறித்து இந்தியத் தலைவர்கள் கவனமாகவே உள்ளனர். இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நோர்வே அனுசரணையாளராக மிகச் சிறப்பாகப் பணியாற்றியுள்ளது.



இலங்கையில் சீனாவும், பாகிஸ்தானும் தளம் அமைப்பதைத் தடுக்க இந்தியா தலையிடவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால், நிச்சயம் தமிழர்களுக்கும் எதிராகத்தான் அது அமையும். இந்தியாவில் உள்ள தமிழர்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் தொப்புள் கொடி உறவு உள்ளது. இலங்கைத் தமிழர் கள் தொடர்பில் இந்தியாவில் உள்ள தமிழர் கள் அக்கறையோடு உள்ளார்கள்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## முதலாம் ஆண்டு நினைவலை

| அன்னையின் மடியில் | மாயவன்அடியில் |
|---|---|
| 28.11.1950 | 26.12.2004 |



அமரர்

**பொன்னையா வேலும்மயிலும் (வேலு)**

(பாதுகாப்பு உத்தியோகத்தர்,
இலங்கை வங்கி -பருத்தித்துறை)

திதி:பிரதமை 16.12.2005

தீராத கவலையினால் நாம் தினந்தோறும் துவள்கின்றோம் அப்பா!
எங்களைத் தவிக்கவிட்டு எங்குதான் சென்றீர்கள் அப்பா!
பணிவிடைகள் பல செய்யக் காத்திருந்ன்தோம் பல நாளாய்!
பணிவிடைகள் பாராமற் சென்றது ஏன் அப்பா!
ஆண்டுகள் பல கடந்தாலும் ஆறிடுமோ ஒரு நாளில் எங்கள் மனம்
அகன்றிடுமோ உங்கள் நினைவுகள் அப்பா!
எங்கள் அன்புத் தந்தையின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி !சாந்தி !!சாந்தி!!!

தரக்கம்பரை,
புலோலி தெற்கு, புலோலி. (43973)

உங்கள் பிரிவால் துயரும்:
வேலும்மயிலும் குடும்பத்தினர்.

## நெஞ்சைவிட்டகலாத ஆறாம் ஆண்டு நினைவுகள்

மலர்வு 24 . 08 . 1949



உதிர்வு 23 . 12 . 1999

**அமரர் வைரமுத்து இரத்தினசிங்கம் (வாணர்)**

(கா.சீ.கூ)

திதி: பிரதமை 16.12.2005

இன்று உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டுகின்றோம்

என்றும் உங்கள் நினைவில்
மனைவி,சகோதரர்

நி.மு:
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

த.மு:
கட்டுடை,மானிப்பாய்.

## ரணில் மீது குற்றச்சாட்டு; சு.க.அவருக்குக் கடிதம்

கொழும்பு, டிசெ.16

நாட்டில் அமைதியை ஏற்படுத்தும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பை வழங்காமல் மீண்டுமொரு அரசியல் சூதாட்டத்தில் ஈடுபடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க முயற்சி செய்து வருகிறார் என்றுஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குற்றஞ்சாட்டியிருக்கிறது.

நாட்டின் அமைதி முயற்சிகள் தொடர்பில் ஐ.தே.க. தலைவருக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரி பால சிறிசேன கடிதமொன்றை அனுப்பியிருக்கிறார். அந்தக் கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப் பட்டிருக்கின்றது. அதில் மேலும் கூறப்பட் டிருப்பதாவது:-

போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறி விடுதலைப்புலிகள் மேற்கொள்ளும் சம்பவங்களால் ஏற்பட்டிருக்கும் நிலைமையைப் பயன்படுத்தி கடந்த சில தினங்களாக நீங்கள் வெளியிட்டுவரும் அரசியல் அறிவிப்புகள் குறித்து நாம் கவனஞ்செலுத்துகின்றோம். இவற்றுக்கான பொறுப்பை எமது கூட்டமைப்பு அரசும், அதன் அங்கத்துவ கட்சிகளும் ஏற்கவேண்டுமென நீங்கள் கூறி வருவது தற்போதைய அமைதி முயற்சிகளைப்பெரிதும் பாதிக்கும்.

ஆனாலும் தேசியப்பிரச்சினையைத் தீர்க்க இரு பிரதான கட்சிகளும் ஒன்றிணைய வேண்டுமென தேர்தல் காலத்தில் கூறிய நீங்கள், இப்போது அதற்கு எதிர்மாறாக நடந்துகொண்டு, அமைதி முயற்சிகளுக்கு ஒத்துழைக்குமாறு ஜனாதிபதி விடுத்த வேண்டுகோளையும் ஏற்றுக்கொள்ளாமலிருக்கின்றீர்கள்.

எனவே, அமைதியை விரும்பும் நாட்டு மக்களின் நன்மை கருதி சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- இவ்வாறு அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ப-05)

## மிதிபலகைப் பிரயாணத்தால் விபத்து: ஒருவர் காயம்

தென்மராட்சி,டிசெ.16

மினிபஸ் மதிபலகையில் பயணித்த நபர் மற்றொரு மினிபஸ்சுடன் மோதுண்டு காயமடைந்தார்.

கடந்த திங்கட்கிழமை முகமாலையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பயணிகளை ஏற்றிக்கொண்டு மினிபஸ் புறப்பட்ட வேளையில் அதன் மிதி பலகையில் நின்று பயணித்த இந்த நபர் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மற்றொரு மினிபஸ்சுடன் மோதியதில் காயமடைந்தார் என்றுதெரிவிக்கப்பட்டது.

மிருசுவில் வடக்கைச்சேர்ந்த தர்மலிங்கம் மில்டன் (வயது 28) என்பவரே இதில் காலில் காயமடைந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

(ஓ –117)


IIS COMPUTER COURSES

O/L 2005 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே !

உங்கள் பரீட்சை முடிவுகள் வெளியாகும் வரையுள்ள பொன்னான காலத்தை
IIS இல் இணைந்து பயனுள்ளதாக்குங்கள்

சர்வதேச அங்கீகாரம் பெற்ற கணனி நிறுவனம் ஒன்றின் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஓர் அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்

01.01.2006
அன்று பதிவினை மேற்கொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும்
பதிவுக்கட்டணத்தில்
50%
கட்டணச்சலுகை வழங்கப்படும்

New Batches Start on

Batch 1 [Weekend] : 01.01.2006
Batch 2 [Weekday] : 03.01.2006
Batch 3 [Weekday] : 11.01.2006
Batch 4 [Weekend] : 14.01.2006
at 10.00 A.M.

| பயிற்சி நெறிகள் | | வழமையான கட்டணம் | சலுகைக் கட்டணம் |
|---|---|---|---|
| Diploma in MS Office | | ~~4000/=~~ | 2000/= |
| Diploma in Desk Top Publishing | | ~~4000/=~~ | 2000/= |
| Diploma in Internet Technology | | ~~6000/=~~ | 3000/= |
| Diploma in Hardware Technology | | ~~7000/=~~ | 3000/= |
| Diploma in Computer Programming | | ~~10000/=~~ | 6000/= |
| PageMaker | CorelDRAW | ~~1500/=~~ | 1000/= |
| Flash | Photoshop | | |

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்

INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)
# 100, Clock Tower Road, Jaffna
T.P.No. : 021 222 2831
Email : iiscc@sltnet.lk



அருணன்ஸ் தரும் அதிசய அதிரடி

நத்தார் , புது வருட பண்டிகைகளை முன்னிட்டு
டிசெம்பர் 19 முதல் ஜனவரி 15 வரை பொருட்களை வாங்குகின்ற
பாடசாலைகள், கழகங்களுக்கு விசேட கழிவுடன், ஒவ்வொரு
பொருட்களும் அதிசயிக்க வைக்கும் அதிரடித் தள்ளுபடி விலையில்

சகல விதமான விளையாட்டு உபகரணங்கள்
விளையாட்டு வீரர் கிட் பாக் மற்றும் காலணிகள்
உள்ளக விளையாட்டுக்களுக்கான உபகரணங்கள்
விளையாட்டு அணிகளுக்கான சீருடைகள்

தரமான பொருட்களை மலிவாக வாங்கிட நாடுங்கள்
ARUNS SPORTS SPOT
வாருங்கள் வந்து பாருங்கள். எல்லாப் பொருள்களுக்கும் கழிவுண்டு

அருணன்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்பொட்
253, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
ARUNS SPORTS SPOT
253, Stanly Road, Jaffna.
ASTA 0777283719



யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு நேற்றுமுன்தினம் அங்கு நடத்தப்பட்ட நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான அன்பளிப்புகளை யாழ்.போதனா வைத்தியசாலையின் மயக்க மருந்தியல் நிபுணரும் பதில் பணிப்பாளருமான டாக்டர் ஆர்.கணேசமூர்த்தி மற்றும் காது, மூக்கு, தொண்டை, சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.சிவசுப்பிரமணியம் ஆகியோர் வழங்குவதை முதல் இரு படங்களில் காணலாம். நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் புற்று நோய் சிகிச்சை நிலைய விடுதியில் நோயாளர்களுக்குச் சிற்றுண்டி வழங்கப்படுவதை ஏனைய இரண்டு படங்களிலும் காணலாம். (படங்கள்: பகீரதன்)

## மானிப்பாய் வைத்தியசாலையில் முக்கிய பணிகளுக்கு ஆளின்றிச் சிரமம்

நவாலி,டிசெ.16

மானிப்பாய் அரசினர் வைத்திய சாலையில் மூன்று முக்கிய பதவி வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படவில்லை என்று கூறப் படுகின்றது.

இங்கு பணியாற்றிய மருத்துவ மாது ஓய்வுபெற்றுச் சென்று சில வருடங்களாகியும் இவரது இடத் திற்கு வேறொருவர் நியமிக்கப்பட வில்லை. இதனால், இப்பிரதேசத் திலுள்ள கர்ப்பிணித் தாய்மார் பிர சவத்திற்காகத் தூர இடங்களிலுள்ள வைத்தியசாலைகளை நாடிச் செல்ல வேண்டியுள்ளது.

மேலும் இங்கிருந்த மருந்துக் கலவையாளர் இடமாற்றலாகிச் சென்று ஒரு வருடத்திற்கு மேலா கியும் இதுவரை வேறொருவர் நிய மிக்கப்படவில்லை. இதேபோன்று, இரத்தம் பரிசோதிப்பவர் ஓய்வு பெற்றுச் சென்றும் வேறொருவர் வந்து சேரவில்லை.

இதனால், நோயாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கவேண்டி யுள்ளனர். அண்மையில் இடம் பெற்ற அசம்பாவிதங்களின் போது இப்பகுதியிலுள்ள ஒரு சில கர்ப்பி ணிகள் இரவுவேளை பிரசவ வலி யால் துடித்தபோது அவர்களை வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்வதற்கு வாகன உரிமையாளர் சிலர் பாதுகாப்புக் கருதி மறுத்து விட்டதனால் வேறு மார்க்கமாக பல கஷ்டங்களின் மத்தியில் வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

ஆனால், இவ் வைத்தியசாலை யில் மருத்துவமாது ஒருவர் இருந் திருந்தால், இவ்வாறான அவலங் கள் ஏற்படமாட்டாதென்று மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (ஒ-100)

## யாழ்.பல்கலையில் அடுத்த வருடம் இந்துக் கலைக்கூடம் நிறுவ ஏற்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ்.பல்கலைக் கழகத்தில் 'இந் துக் கலைக் கூடம்' ஒன்றை நிறுவு வதற்கு பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக்குழு அனுமதி வழங் கியுள்ளது. அதற்குரிய நிதியையும் ஆணைக்குழு வழங்கியுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடா திபதி இரா.சிவச்சந்திரன் தெரிவித் துள்ளார்.

கடந்த பல ஆண்டுகளாக கலைப் பீடத்தின் இந்து நாகரிகத்துறையின ரால் இந்தத் திட்டம் முன்மொழியப் பட்டிருந்தது. எனினும், தற்போதே நிறைவேற்றப்படவிருப்பதாக கலைப்பீடாதிபதி மேலும் தெரிவித் தார்.

யாழ்.பல்கலைக்கழக வளாகத் தில் காணப்படும் தொல்பொருள் காட்சியகத்தைப் புனரமைக்கும் திட்டத்தின் முதற்கட்டப் பணியா கவே 'இந்துக் கலைக் கூடம்' உரு வாக்கப்படுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இக் கலைக்கூடத்தில் இந்து ஆலயங்களின் மாதிரி வடிவமைப் புகள், கோபுர அமைப்பு, வாகனங் களின் அமைப்பு, இந்து தெய்வங் களின் வெண்கலச் சிலைகள், சிற் பங்கள், நவக்கிரகங்கள், நினைவுப் பதிவுகள், முத்திரைகள் போன்ற பல் வேறுபட்ட பதிவுகள் காட்சிப்ப டுத்தப்படவுள்ளன.

இக் கலைக்கூடத்தை ஆரம்பிக் கும் பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவிருப்பதா கவும்-

தொல்பொருள் காட்சியக புன ரமைப்புப் பணிகளும் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் கலைப் பீடாதிபதி தெரிவித்தார்.

(த-12-190)

## ஈழத்துச் சிதம்பரம் செல்லும் வீதி மோசம்

காரைநகர்,டிசெ.16

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்துக்குச் செல்லும் பிரதான வீதியின் ஒருபகுதி குண்டும் குழி யுமாகக் காணப்படுவதுடன் மழை நீரும் தேங்கி நிற்பதால் ஆலயத் திற்குச் சென்றுவரும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அடுத்த மாதம் 4ஆம் திகதி திருவாதிரை உற்சவம் ஆரம்பமாக உள்ளதால் இவ்வீதியை விரை வில் புனரமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வீதியைக் கசூரினாக் கடற் கரை, சாம்பலோடை இந்து மயா னம் என்பவற்றிற்குச் செல்வோ ரும் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-73)

## விவசாய உறுப்பினர்களுக்கு உதவி

வலி.தெற்கு,டிசெ.16

சர்வதேச கெயர் நிறுவனம் சுய தொழில் முயற்சிக்கான கடனுதவி நிதியை அராலி தெற்கு வலய பாட சாலை விவசாய உறுப்பினர்க ளுக்கு வழங்கியுள்ளது.

கால்நடை வளர்ப்பை ஊக்கு விக்கும் நோக்குடன் தெரிவுசெய் யப்பட்ட பதின்மூன்று பயனாளி களுக்கு நிதிக்கடன் வழங்கப்பட் டுள்ளதாக சர்வதேச கெயர் நிறுவ னத்தின் வெளிக்கள திட்ட அலுவ லர் வை.சுப்பிரமணியம் தெரிவித் தார்.

ஒவ்வொரு பயனாளிக்கும் தலா இருபதாயிரம் ரூபா கடனாக வழங் கப்பட்டுள்ளது.

அதேசமயம், தொல்புரம் கமநல சேவைகள் திணைக்களம் கால்நடை வைத்திய அதிகாரி, பயிற்சி அதி காரி பணிமனையுடன் இணைந்து கால்நடை வளர்ப்பு தொடர்பான பயிற்சிகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-152)

## காரைநகர் மத்திய பகுதியில் வளர்ப்பு நாய்கள் பதிவு

காரைநகர், டிசெ.16

காரைநகர் பிரதேசத்தில் கட் டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத் துவதற்காக வீடுகளில் வளர்க்கும் வளர்ப்பு நாய்களைப் பதிவுசெய்து இலக்கத்தகடு வழங்குவதெனக் கடந்த செவ்வாய்க்கிழமை காரை நகர் பிரதேச செயலகத்தில் நடை பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட் டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

முதற் கட்டமாக எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை காரை நகர்மத்தி கிராம சேவையாளர் பிரி வில் உள்ள நாய்களைப் பதிவு செய்து இலக்கத்தகடு வழங்கப்படும் என வும்-

இப்பணியை கால்நடைப் பகுதி உத்தியோகத்தர், பொதுச் சுகாதா ரப்பரிசோதகர், காரைநகர் பிரதேச சபைப் பொறுப்பதிகாரி ஆகியோர் மேற்கொள்ளவுள்ளனர் என்றும்- காரைநகர் மத்தி கிராமசேவையா ளர் எஸ். கே. சிவலிங்கம் தெரிவித் துள்ளார். (ஒ-73)

## தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் உதவிப் பதிவாளர் அலுவலகம் திறப்பு

தென்மராட்சி,டிசெ.16

தென்மராட்சிப் பிரதேச செயல கத்தில் உதவிப் பதிவாளர் அலுவல கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு உதவிப் பதிவாளராக திருமதி அன் ரனீற்றா அன்ரன் மரியசேவியர் நிய மிக்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் இந்த அலுவலகம் ஆரம்பமானது.

சான்றிதழ் பெற விண்ணப்பிப் போர் சான்றிதழின் பதிவு இலக்கம் தெரிந்தால் ஒரு பிரதிக்கு 25 ரூபா வீதமும் பதிவு இலக்கம் தெரியா தெனில் முதற்பிரதிக்கு 50 ரூபா வும் ஏனைய பிரதிக்கு 25 ரூபா வீத மும் முத்திரைகள் ஒட்ட வேண் டும் என்றும் -

ஒரு விண்ணப்பத்தில் மூன்று பிரதிகளுக்கு மட்டுமே விண்ணப் பிக்க முடியுமெனவும் - தெரிவிக் கப்பட்டது.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிக் கும் போது 5 ரூபா பெறுமதியான முத்திரையொட்டிய சுயமுகவரியி டப்பட்ட கடித உறையும் இணைக்கப் படல் வேண்டுமெனத் தெரிவிக்கப் பட்டது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம் பெற்ற பிறப்பு, இறப்பு, விவா கச் சான்றிதழ்கள் மட்டும் இவ் வலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் கூறப்பட்டது. (ஒ-117)

## வெள்ளத்தால் இடம்பெயர்ந்தோருக்கு உணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், டிசெ.16

யாழ்ப்பாணம், மடம் வீதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக் களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழ கத்தின் உதவியுடன் திருவள்ளுவர் சனசமூக நிலையத்தினர் உணவுப் பொருள்களை வழங்கினர்.

சமீபத்தில் பெய்த அடைமழை காரணமாக மேற்படி பகுதியில் 100இற்கு மேற்பட்ட குடும்பங்கள் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறி திருவள்ளுவர் சனச மூக நிலையத்திலும், திரு இருதய ஆண்டவர் ஆலயத்திலும் தஞ்சம டைந்திருந்தனர்- இவர்களுக்கே உணவுப்பொருள்கள் வழங்கப்பட் டன. (ஒ-13)




## வெள்ள நிவாரணத்தில் பாரபட்சம்: பாதிப்படைந்தோர் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.16

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சில குடும்பங்களுக்குப் பல்வேறு காரணங்களைக் காட்டி நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை யெனப் பாதிக்கப்பட்ட மக்கள் உய ரதிகாரிகளிடம் முறையிட்டுள்ள னர் என்று கூறப்படுகிறது.

கடந்த மாதம் ஏற்பட்ட மழை யாலும் கடந்த சனிக்கிழமை வீசிய சூறாவளியாலும் யாழ்.மாவட்டத் தில் பல ஆயிரக்கணக்கான குடும் பங்கள் பாதிக்கப்பட்டன.

இக்குடும்பங்களைச் சேர்ந்தவர் களுக்கான நிவாரண உதவிகளை யாழ்.செயலகத்தின் ஒழுங்குபடுத் தலில் பிரதேச செயலகங்கள் மேற் கொண்டுவருகின்றன.

இந்தநிலையில், வழமையாக வேறு நிவாரணத்திட்டத்தின் மூலம் நிவாரணம் பெற்று வந்த குடும்பங் கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட் டிருப்பின் அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படாது என மேலதிகாரி களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று குறிப்பிட்ட சில கிராம சேவகர் பிரிவுகளில் வெள் ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கான நிவாரணங்களை வழங் குவதில் பாரபட்சம் காட்டப்படுவ தாகவும் கூறப்படுகிறது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களின் தொகையை மட்டுப்படுத்தி பதிவு கள் மேற்கொள்ளப்படுவதாகவும்-

நிரந்தர வீடுகளில் இருந்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருப் பினும் அவர்களைத் தவிர்த்து தற் காலிகக் குடிசைகளில் வசிப்பவர் கள் மட்டுமே பதிவுசெய்யப்படுவ தாகவும்- பாதிக்கப்படுபவர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

உரிய அதிகாரிகள் இவ்விடயத் தைக் கவனத்தில் எடுத்து உண்மை யாகவே பாதிக்கப்பட்ட மக்களை நிவாரணம் சென்றடைய ஆவன செய்யவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.-

இதேவேளை, இது தொடர் பான அரச சுற்றறிக்கையில் வெள் ளத்தால் பாதிக்கப்பட்ட 3 ஆயிரம் ரூபாவிற்குக் குறைவான மாதவரு மானம் பெறும் சகலரும் வெள்ள நிவாரணம் பெறத் தகுதியானவர் கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-202-203)

## சாவகச்சேரி கல்வயல் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

சாவகச்சேரி கல்வயல் பகுதி யில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு எதிர்வரும் 20, 21 ஆம் திகதிக ளில் பின்வரும் இடங்களில் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற் றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு மருதடிபிள்ளை யார் கோயிலடி, 9.30 மணிக்கு ஓராம் கட்டை துர்க்கா மில்லடி, 10 மணிக்கு கல்வயல் சண்முகானந் தா பாடசாலை, 10.30 மணிக்கு துர்க்கா கடையடி சந்தி ஆகியவற் றிலும் -

எதிர்வரும் 21ஆம் திகதி காலை 9 மணிக்கு வேதவனப்பிள் ளையார் கோயிலடி, 10 மணிக்கு பெருங்குளம் பிள்ளையார் கோயி லடி, 11 மணிக்கு கெருடாவில் பாட சாலையடி ஆகியவற்றிலும் -வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்பட வுள்ளது.

இவ்விடங்களில் வளர்ப்பு நாய் களுக்குப் பதிவு அட்டை வழங்கப்படு மெனவும் தடுப்பூசி மருந்து ஏற்றப் படாத - பதிவு செய்யப்படாத - நாய் கள் கட்டாக்காலி நாய்களாகக் கணிக் கப்பட்டு அழிக்கப்படுமெனவும் நக ரசபை செயலாளர் திருமதி குணமணி தேவி ஆறுமுகம் அறிவித்துள்ளார் (ஒ-117)

## மானிப்பாயில் நவீன சந்தை அமைக்க 'நீர்ப்' ஊடாக நிதி தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.16

மானிப்பாய் நகரப் பகுதியில் நவீன சந்தை அமைக்க 'நீர்ப்' திட் டத்தின் ஊடாக நிதி ஒதுக்கீடு செய் யுமாறு வலி.தென்மேற்கு, மானிப் பாய் பிரதேச சபை யாழ்.அரச அதி பரைக் கடிதம் மூலம் கோரியுள்ளது.

அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:-

வலி.தென்தேற்கு மானிப்பாய் பிரதேச சபை நான்கு உபஅலுவல கங்களைக் கொண்ட பரந்த பிரதே சத்தைப் பரிபாலிக்கிறது. மானிப் பாய் நகரப்பகுதி, மக்கள் செறிந்து வாழும் பிரதேசமாகும்.

1969 ஆம் ஆண்டில் உருவாக் கப்பட்ட சந்தையையே தற்போதும் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். அவர்கள் மிகவும் கஷ்டமான சூழ லிலேயே சந்தையைப் பயன் படுத்துகின்றனர்.

எனவே, மேற்படி தேவையை நிறைவேற்ற இரண்டு கோடி ரூபா செலவில் நவீன சந்தை அமைக்க நிதிவசதி செய்து தரவேண்டும். இவ்வாறு திட்ட முன்மொழிவுக் கடி தத்தில் கோரப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்தின் பிரதி திரு கோணமலை 'நீர்ப்' திட்டப் பணிப் பாளருக்கும் அனுப்பிவைக்கப்பட் டுள்ளது. (ஒ-180)

# மீண்டும் பண்டார...

(5ஆம் பக்கத்தொடர்ச்சி)
பிரதி சபா நாயகர், பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவை பேசும்படி அழைத்தார்.

அதாவது, அவர் அழைக்கும்போது ''பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவை பேசும்படி அழைக்கின்றேன்'' எனக் கூறினார்.

இந்த சந்தர்ப்பத்திலேயே பிரதி அமைச்சர் துள்ளிக் குதித்தார்.

நேற்று சபை அமர்வுகள் மதியபோசன இடைவெளியின்றி தொடர்ந்து நடைபெற்றதால் ஏற்பட்ட பசியினால்தான் இப்படிக் சூடாகிவிட்டதுபோல் காணப்பட்டது.

''நான் கலாநிதிப் பட்டம்பெற்றவன். என்னை அழைக்கும்போது கலாநிதி மேர்வின் சில்வா என்றே அழைக்கவேண்டும்'' எனப் பிரதி சபாநாயகரைப் பார்த்து சற்று காட்டமாகவே கூறிவிட்டார். 'கலாநிதி' மேர்வின்.

''அப்படியா! சங்கதி, உங்களுக்கு கலாநிதிப்பட்டம் யாரால் வழங்கப்பட்டது? எதற்காக வழங்கப்பட்டது? எந்த பல்கலைக்கழகத்தில் இந்தப் பட்டத்தைப் பெற்றீர்கள்?'' - எனப் பிரதி சபாநாயகர் திரும்பிக் கேட்டார்.

''அது எனக்குத் தெரியாது. ஏன், எதற்குப் பட்டம் கொடுக்கப்பட்டது என்பதை எனக்குப் பட்டம் வழங்கிய பல்கலைக்கழகத்திலேயே கேட்டுதெரிந்து கொள்ளுங்கள்'' எனப்பதில் அளித்தார் பிரதி அமைச்சர் மேர்வின்சில்வா.

அதற்கு மேல் எதையும் கேட்டுக் குழப்பியடிக்க விரும்பாத பிரதிச் சபாநாயகர் ''இப்பொழுது கலாநிதி - பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா பேசுவார்'' என அழைத்தார்.

இப்படிக் கௌரவத்தைக் கேட்டுப்பெற்றுக் கொண்ட கலாநிதி மேர்வின் சில்வா பேச ஆரம்பித்தார். அவருடைய எடுப்பில் காணப்பட்ட வேகம் பேச்சில் காணப்படவில்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஹஸன் அலி ஆயுதக்குழுக்களுடன் அமைச்சர்களின் தொடர்புகள் பற்றி வெளியான பத்திரிகை செய்திகளை மேற்கோள்காட்டிப் பேசினார்.

இந்த அரசில் முக்கியமான மூன்று அமைச்சர்கள் கிழக்கில் இயங்கும் ஆயுதக் குழு ஒன்றுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளனர். அவர்களுக்கு ஆதரவு வழங்குகின்றனர் என கொழும்பில் இருந்து வெளிவரும் தமிழ் பத்திரிகைகள் முன்பக்கச் செய்திகளை வெளியிட்டுள்ளன. இது தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் குழப்ப நிலையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, இவ்விடயம் தொடர்பாக விவரம் அறிந்து, இந்த நாடாளுமன்றத்தில் விரிவான அறிக்கை ஒன்றை வெளியிட்டு, உண்மை நிலையை தெளிவுபடுத்தவேண்டும் என ஹஸன் அலி எம்.பி.கோரிக்கை விடுத்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஹஸன் அலியின் கூற்றுக்கு எதிர்மாறாக அமைச்சர்களுக்காக வக்காலத்து வாங்கினார் முஸ்லிம் காங்கிரஸின் மாற்றுக்குழுவைச் சேர்ந்த அமைச்சர் நஜீப் அப்துல் மஜீத்

பத்திரிகைகளில் வந்த செய்திகள் நம்பகத் தன்மையுள்ளதாகத் தெரியவில்லை. எங்களுடைய தலைவர்களோ அல்லது அமைச்சர்களோ சட்டவிரோதமாக ஆயுதக்குழுக்களுடன் தொடர்புகளைக் கொண்டிருக்க மாட்டார்கள் என வக்காலத்து வாங்கும் வகையில் மழுப்பி அடித்து விட்டார் மஜீத்.

இனங்களுக்கு இடையில் மோதல்களை ஏற்படுத்தும் சதியில் அமைச்சர்கள் ஈடுபட்டுள்ளார்கள் என்ற செய்தி தவறானது. எமது தலைவர்கள் ஒரு போதும் இவ்வாறான செயலில் ஈடுபடமாட்டார்கள். இது உறுதி. - என்றும் அமைச்சர் மஜீத் கூறினார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் களான சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், வினோதராதலிங்கம் ஆகியோர், நிழல் யுத்தத்தை தவிர்க்காவிட்டால் அபிவிருத்தித்திட்டங்களுக்கான நிதி பாதுகாப்பு செலவினங்களுக்கே போய்விடும் என எச்சரிக்கை விடுத்தனர்.

நாடாளுமன்றம் மீண்டும் 19ஆம் திகதி காலை 9.30 மணிக்குக் கூடும்.


## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 - 06 - 1950



மறைவு 16 - 12 - 1995

### திருமதி மேரி மாகிறெற் துரைநாயகம்
(ரத்தினம்)

பரிவோடு எமை வளர்த்து
பாசமாய் முகர்ந்தணைத்து
கண்ட கனவுகள் நனவாகுமுன்னே
காலனவன் சடுதியாய் அணைத்தானோ
உங்கள் இனிய முகமது காணாது
வாடுகின்றோம் இப்புவியில்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.38, மாட்டீன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(உசன், மிருசுவில்)

பாசமுடன்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரக்குழந்தைகள்.

(44108)(26-19-11)



## முதலாம் ஆண்டு நினைவும் 10 ஆவது பிறந்த நாளும்

26.12.2004 அன்று ஆழிப்பேரலையில்
உயிர்நீத்த இராமநாதன் கல்லூரி
மாணவியும் வாழ்வகப்பிள்ளையுமான
திருப்பதிநாதன் நிறஞ்சனா

தோற்றம் : 16.12.1995
மறைவு : 26.12.2004



மார்கழி பதினாறில் மண்ணில் மலர்ந்த
மழலையே!
இராமநாதன் கல்லூரி மலரே- நீ
வாழ்வகத்தை வதிவிடமாக்கி
அகவை ஒன்பதை கழித்துவிட்டு
உன் இல்லம் நாடிவந்த பத்தாம் நாள்
வித்தாகி விட்டாயே - இன்று
உன் புத்தாவது அகவை தனில்
கதறியழுகின்றோம் கல்லறையருகே

### திருப்பதிநாதன் நிறஞ்சனா

உடுத்துறை வடக்கு,
வடமராட்சி கிழக்கு.

அப்பா, அம்மா, அண்ணா.

(44080)(51)


# வடக்கு, கிழக்கை...

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)
யில் வெறுமனே நிதி ஒதுக்கப்படுவதனால் மட்டும் எந்தப் பிரயோசனமும் ஏற்படமாட்டாது. அதேபோல், ஒதுக்கப்படும் நிதி யுத்த முயற்சிகளுக்கு திசை திருப்பப்படும் சந்தர்ப்பங்களும் அதிகம்.

இந்த வரவு செலவுத் திட்டதின் மூலம் விவசாயிகளுக்கு உரம் 350 ரூபாவுக்கு வழங்க முன்மொழி யப்பட்டிருக்கிறது. வடக்கு - கிழக்குப் பிர தேசங்களில் வாழும் விவசாயிகளின் உரப் பாவனைக்கு இராணுவக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட சூழ்நிலைளைக் கருத்திற்கொள்ளுமிடத்து இது வெறுமனே ஓர் அரசியல் வேடிக்கையாகவே உள்ளது. விவசாயிகளின் வாழ்வியல் நிலை உயர்வை வெறுமனே 350 ரூபாவிற்கு உரம் வழ்ங்குவதன் மூலம் சாதித்துவிடலாம் எனக் கனவு காணக்கூடாது.

இந்த நாட்டில் எதிர்வரும் ஆண்டுகளில் 8 சதவீத பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தப்போகிறீர்கள் எனக் கூறுகிறீர்கள். அவ்வாறு 8 சதவீத வளர்ச்சியைப் பெற வேண்டுமானால் முதலீடுகள், மொத்த உள் நாட்டு உற்பத்தியின் 38 சதவீதம் வரையில் உயர்வடைந்தாலேயே அது சாத்தியமாகும். மொத்த முதலீடுகள் தற்போது அத்தகைய உயர்ந்த மட்டத்தில் இல்லை. எமது நாட்டு மக்களின் உள்நாட்டு சேமிப்பு மட்டம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 23 சதவீதத்தை அண்டியதாகவே உள்ளது. இந் நிலையில் எவ்வாறு 38 சதவீத முதலீட்டை ஏற்படுத்துவீர்கள்?

புதிய அரசாங்கத்தின் கொள்கைகள் தனியார்துறை முதலீட்டையோ வெளிநாட்டு நேரடி முதலீட்டையே ஊக்குவிக்கும் நிலையில் இல்லை. இனப்பிரச்சினை இழுபறிப் பட்டுக்கொண்டு செல்லுமானால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இங்கு வரமாட்டார்கள். எனவே, எதிர்பார்க்கப்படும் 8 சதவீத பொருளாதார வளர்ச்சி இலக்கு ஒரு கனவாக மட்டுமே அமையக் கூடும்.

வருடாந்தம் இலட்சக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு வழங்கப் போகிறீர்கள் எனக் கூறுகிறீர்கள். தனியார் துறையின் பங்களிப்பின்றி, வெளிநாட்டு முதலீட்டு உள் வருகையின்றி உங்களால் சில ஆயிரக் கணக்கான தொழில் வாய்ப்புக்களை மட்டுமே உருவாக்கக் கூடியதாக இருக்கும். அதுவும் ஏற்கனவே அதிக பயணிகள் ஏற்றப்பட்டு மூழ்கிக் கொண்டிருக்கும் நிலையிலுள்ள அரசாங்கத்துறையில் மேலும் பயணிகளை எற்றி மூழ்கடிக்கும் முயற்சியாகவே இது அமையும்.

இனவாதச் சகதிக்குள் சிக்கி, குறுகிய அரசியல் குட்டைக்குள் உழன்று கொண்டிருக்காமல், வெளியுலகத்தைச் சற்றே எட்டிப் பாருங்கள். எங்களை வாழவிடுங்கள். நீங்களும் நிம்மதியாக வாழுங்கள். அதனைவிட்டுப் பேரினவாத கட்டுப்பெட்டிகளாக, மனிதத் தன்மையற்று பாதிக்கப்பட்ட மக்களை மேலும் காலுக்குள் போட்டு மிதித்து அவர்கள் குரல்வளையை நசுக்க முனையும் அநாகரிகத்தைத் தொடர்ந்து செய்ய முற்படுவீர்களாயின் அழியப்போவது தமிழ் மக்கள் மட்டுமல்ல, அப்பாவிச் சிங்கள மக்களும், இந்த முழுநாட்டின் எதிர்காலமும் கூடத்தான். - என்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

(க)

# இலங்கை - இந்திய...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கையின் முன்னாள் அரச தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கடந்த 1986ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக இந்தியாவைச் செயற்பட வைத்தார். அதே செயற்பாட்டை இப்போதைய அரசும் மேற்கொள்கிறது. அந்த நிலைப்பாட்டினால் இலங்கைத் தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் இடையே இடைவெளி ஏற்பட்டுவிட்டது.

இலங்கைப் பிரச்சினையில் அடிப்படையான தமிழர் தாயகத்தை பகிரங்கமாக நிராகரிப்பது என்பது மறைந்த முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் மேற்கொண்ட உறுதியான நிலைப்பாட்டுக்கு நேர்முரணானது. தமிழர் தாயகக் கோட்பாடு திம்பு பேச்சுகளில் ஏற்கப்பட்டதொன்று.

கடந்த 50 ஆண்டு காலமாக தங்களது தாயகத்திலே வாழ்கிற தமிழர்களை நசுக்கி ஒடுக்க வேண்டும் என்பதுதான் சிங்கள தேசியவாதிகளின் கருத்து. ஸ்ரீலங்காவின் இந்தச் சிந்தனை யோட்டத்தை இந்தியத் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழர் தலைவர்களுடனான ஒப்பந்தங்கள் அனைத்தையுமே சிங்கள அரசுகள் நிராகரித்தே வந்திருக்கின்றன. ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக உருவாக்கப்பட்ட மனிதாபிமான அடிப்படையிலான ஆழிப்பேரலை பொதுக் கட்டமைப்புக்கு நேர்ந்த கதி என்ன? இந்த மனிதாபிமானக் கட்டமைப்பையே ஸ்ரீலங்கா நீதித்துறை தடுத்து நிறுத்துமானால் தமிழர்களது எந்த உரிமையை அவர்கள் ஒப்புக் கொள்வார்கள்?

பாலஸ்தீனத்தின் மேற்குக்கரை யூதக் குடியேற்றங்களிலே என்ன நடக்கிறது என்பதை நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஒரு இனத்தின் தாயகத்திலே ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்பட்டால் அதற்கு ஏற்படும் விளைவு என்ன என்பதற்கு உலகமே சாட்சியாக நின்று பார்த்துக் கொண்டி ருக் கிறது. அதை நியாயப்படுத்த முடியாது.

பிரச்சினை என்றால் தீர்வுகாண வேண்டும். இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு காண இலங்கை முன்வரவேண்டும். இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுவரும் கொள்கைகள் சர்வதேச சமூகம் மற்றும் இந்தியாவின் எதிர்பார்ப்புகளுக்கு முரணாக உள்ளன. - என்றார் வைகோ.


கோபாலையரின்
தமிழ் இலக்கணப் பேரகராதி
17 தொகுதிகள்
சேமமடு பொத்தகசாலை
UG.52,பீப்பிள்ஸ் பார்க்,
கொழும்பு-11,
011-2331475 பெற்றுக்கொள்ளலாம்.
(க.46677) (21.14.15)



## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தையா இராசம்மா

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா இராசம்மா அவர்கள் 14.12.2005 புதன்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா அவர்களின் அன்பு மனைவியும் மாலினி, வசந்தி, பாஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் அன்ரனிதாஸ், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் செரின்நயனி, நிருபன் மற்றும் ஜோதிலக்ஷ்மி, தேவகணேஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2005) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் கொட்டடி சேமக்காலையில் (ரெலிகொம் அருகில்) நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5/12, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்
T.P.: 021222 9172.

தகவல்:
அ.மாலினி.

(44120) (32-26-11-19)

### ஐயம்பிள்ளை சிவசுப்பிரமணியம்

நாச்சிமார் கோயிலடி, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த ஐயம்பிள்ளை சிவசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (15-12-2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை-சோதிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற தெய்வானை அம்மாவின் அன்புக் கணவரும் இரவீந்திரா (வைத்தியர்- அமெரிக்கா), ராகினி, கணேசலிங்கம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் உமா (முன்பள்ளி ஆசிரியை), அரவிந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15-12-2005) வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்றுப் பூதவுடல் கோம்பையன் மணல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

123, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்

தகவல்:
அரவிந்தன் (பேரன்).

(44123) (26.11.19)

# பொருளாதார ஒத்துழைப்பை மேலும் அதிகரிக்க தென்கிழக்காசிய நாடுகளின் மாநாட்டில் முடிவு

கோலாலம்பூர், டிச.16

பொருளாதார ஒத்துழைப்பை நாடுகளிடையே மேலும் அதிகரிப்பது என கோலாலம்பூரில் நடைபெற்ற தென்கிழக்கு ஆசிய நாடுகள் உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட தலைவர்கள் முடிவு செய்து கூட்டுப் பிரகடனம் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் மூன்று நாட்களாக தென்கிழக்கு ஆசிய நாடுகளின் உச்சிமாநாடு நடைபெற்றது.

இந்த மாநாட்டில் சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, புருணை, மியான்மார், லாவோஸ், கம்போடியா, வியட்நாம் ஆகிய 10 நாடுகள் பங்கேற்றன. இதே மாநாட்டில் முதன்முறையாக இந்தியா, சீனா, ஜப்பான், தென்கொரியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளும் பங்கேற்றன. 16 ஆசியநாடுகள் ஒரே சமயத்தில் கூடி மாநாடு நடத்தியது இதுதான் முதன்முறையாகும்.

இந்த மாநாட்டில் 16 நாடுகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். இந்த மாநாட்டில் பேசிய இந்திப் பிரதமர் மன்மோகன்சிங், "ஆசிய நாடுகள் இடையே பொருளாதார வளர்ச்சி காண தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், பொருளதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஆகியவற்றை தீவிரமாகச் செயல்படுத்த வேண்டும்'' - என்று கேட்டுக்கொண்டார்.

ஏனைய நாடுகளின் தலைவர்களும் மாநாட்டில் தனித்தனியாக உரையாற்றினர்.

இந்த உச்சிமாநாடு நேற்றுமுன்தினம் நிறைவுபெற்றது. மாநாட்டின் இறுதியில் 16 நாடுகளின் சார்பில் கூட்டுப் பிரகடனம் வெளியிடப்பட்டது. இந்தக் கூட்டு பிரகடனத்திற்கு 'கோலாலம்பூர் பிரகடனம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டுப் பிரகடனத்தில் 16 நாடுகளின் தலைவர்களும் கையெழுத்திட்டனர்.

தென்கிழக்கு ஆசியா மற்றும் ஆசிய பிராந்தியத்தில் பொருளாதார வளர்ச்சியை பொது நோக்கமாகக் கொண்டு பொருளாதார ஒத்துழைப்பை ஆசிய நாடுகள் அதிகரிக்க முன்வர வேண்டும் என்று அந்தக் கூட்டுப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது.

உலக வங்கி, உலக உணவு அமைப்பு, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் வழிகாட்டுதல்களின் பேரில் தற்போது மேற்கொண்டு வரும் பொருளாதார நடவடிக்கைகளைத் தொடர்ந்து செயலாக்கம் செய்வது என்பதும் இந்தப் பிரகடனத்தில் 16 நாடுகளின் தலைவர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பின் செயலாளர் ராஜீவ்சிக்ரி கூறுகையில், இந்த மாநாடு ஒரு நண்பர்கள் கூட்டத்தைப் போல நடத்தப்பட்டுள்ளது. அதேசமயம், இந்தப் பிராந்தியத்தின் தொலைநோக்குப் பார்வையை நோக்கமாகக் கொண்டு நடத்தப்பட்டது என்றார். பிராந்திய, பொருளாதார நோக்கத்தின் அடிப்படையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் சுமார் 150 நிமிடங்கள் மாநாட்டுத் தலைவர்கள் பல்வேறு விடயங்கள் குறித்து விவாதித்தனர் எனவும் அவர் கூறினார். (க)

# 1,444 இந்தியர்கள் சவூதி சிறைகளில்

சவூதி அரேபியாவில் சிறைக்கைதிகளாக 1,444 இந்தியர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். வெளிநாட்டுச் சிறைகளில் இந் தியர்கள் அதிகமாக இருப்பது சவூதி அரேபியாவில்தான் என வெளியுறவுத்துறை இணை அமைச்சர் இ.அகமது தெரிவித்துள் ளார்.

ஏனைய நாடுகளில் தடுத்து வைக்கப் பட்டுள்ள இந்தியர்களின் விவரம் வருமாறு, ஐக்கிய அரபு எமிரேட் 937 பேர், பங்களா தேஷ் 893 பேர், சிங்கப்பூர் 580 பேர், பாகிஸ்தான் 360 பேர், அமெரிக்கா 197 பேர், குவைத் 75 பேர், லெபனான் 70 பேர், இத்தாலி 51 பேர், மியன்மார் 50 பேர் எனவும் அவர் தெரிவித்தார். (க)

# தவறான உளவுத் தகவலால் ஈராக் மீது போர் தொடுத்தோம்



## அமெ. ஜனாதிபதி ஒப்புதல்

வாஷிங்டன், டிச.16

அமெரிக்க உளவுப் பிரிவு அளித்த தவறான தகவல் காரணமாகவே ஈராக் மீது போர் தொடுத்தோம். அந்த வகையில் - ஜனாதிபதி என்ற வகையில் பொறுப்பேற்கிறேன் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

இரசாயன ஆயுதங்களை ஈராக் பதுக்கி வைத்திருப்பதாகக் கூறி அமெரிக்கப் படைகள் ஈராக் மீது போர் தொடுத்தன. எனினும், அங்கு அவ்வாறன ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப் படவில்லை. இந்த நிலையில் வாஷிங்டன் நகரிலுள்ள உட்ரோ வில்சன் மையத்தில் நடந்த கருத்தரங்கொன்றில் உரையாற்றிய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்,

அமெரிக்க உளவுத்துறை எமக்குத் தவறான தகவலைத் தந்துவிட்டது. அதனால் ஈராக் மீது போர் தொடுத்துவிட்டோம். அதிபர் என்ற முறையில் ஈராக் போருக்கு நான் பொறுப்பேற்கிறேன். உளவுத்துறையின் தவறால் ஏற்பட்ட பிரச்சினைக்கு நான் முழுப்பொறுப்பையும் ஏற்கிறேன்.

அதனால் ஈராக்கில் ஒரு நிலையான அரசு உருவாகும் வரை அமெரிக்கப் படைகளை வாபஸ்பெற மாட்டோம். ஈராக் போரில் வெற்றிபெற்றது ஒரு வகையில் சரிதான். சதாம் ஹுசைன் அனைவரையும் மிரட்டி வந்தார். அவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதால் அமெரிக்க மக்களும், உலக மக்களும் பாதுகாப்பென உணர்கிறார்கள்.

எனவே, சதாம் ஹுசைன் நீக்கம் குறித்து நான் எடுத்த முடிவு சரிதான். ஈராக்கில் புதிய ஆட்சி அமைந்த பிறகு ஈராக்கின் எந்த முடிவிலும் அமெரிக்கா தலையிடாது. இவ்வாறு அவர் பேசினார். (க)

# நிதி மோசடி செய்தவருக்கு சீனாவில் மரணதண்டனை

சீனாவில் நிதி நிறுவனப் பணத்தை மோசடி செய்த முன்னாள் அதிகாரிக்கு சீன நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

பீஜிங் வர்த்தகத் துறைக்குச் சொந்தமான ஹின்ஹீ நிதிநிறுனத்தில் பொது மேலாளராக இருந்தவர் யாங் யன்மிங். இவர் இந்த நிறுவனத்தில் கடந்த 1998ஆம் ஆண்டு முதல் 2003வரை பொது மேலாளராக இருந்தார். அப்போது நிறுவனத்திலிருந்து ரூ.36 கோடி வரை (இந்தியப் பெறுமதி)கையாடல் செய்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பிறகு அந்தப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்ட அவர்மீது விசாரணை நடைபெற்று வந்தது.

விசாரணையின் முடிவில் நிதி நிறுவனப் பணத்தை கையாடல் செய்தது ஊர்ஜிதமானது. இதையடுத்து அவருக்கு நீதிமன்றத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டது. (க)



ஈராக்கில் நேற்று நடைபெற்ற பொதுத் தேர்தலில் அந்நாட்டு ஜனாதிபதி ஜலால் தலபானி வாக்களிப்பதை முதலாவது படத்திலும், வாக்களிப்பு நிலையம் ஒன்றின் முன்பாக வாக்காளர்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# இராணுவம் தாக்குதல் பொதுமக்கள் மரணம்!

நேபாளத் தலைநகர் காத்மண்டுப் பகுதியில் நேபாள இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் 15 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மேலும் பலர் காயமடைந்தனர். தலைநகர் காத்மண்டுவுக்கு அண்மையில் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டுவிட்டுக் கூட்டமாக மக்கள் திரும்பிக்கொண்டிருந்த போது இரவுப் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மக்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதன் காரணமாக 15 பொதுமக்கள் உயி ரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந் தனர். தீவிரவாதிகள் எனத் தவறாக நினைத் துத் தாக்குதலை மேற்கொண்டோம் என இரா ணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (க)

உலக அரங்கில்

# பாக். ஜனாதிபதியைக் குறிவைத்து தீவிரவாதிகள் ரொக்கெட் தாக்குதல்!

பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பைக் குறிவைத்துத் தீவிரவாதிகள் ரொக்கெட் தாக்குதல்களை மேற்கொண்டனர். எனினும், அதிஷ்டவசமாக அவர் உயிர்தப்பினார்.

பாகிஸ்தான் பலுஜிஸ்தான் மாகாணத்தில் உள்ள கொக்லா பகுதியில் மலைவாசி மக்களின் தலைவர்களுடன் பேச்சு நடத்த ஜனாதிபதி முஷாரப் சென்றபோது அங்குள்ள இராணுவ முகாம் மீது தீவிரவாதிகள் ரொக்கெட் தாக்குதல்களை நடத்தினர். இதில் எவருக்கும் சேதம் ஏற்படவில்லை. இந்த ரொக்கெட் தாக்குதலுக்கு பலுசிஸ் தான் விடுதலை இராணுவம் என்ற தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது. இந்த அமைப்பு அங்கு தனிநாடு கேட்டுப்போராடி வருகிறது. இந்த இயக்கத்தைச் சேர்ந்த செய்தி தொடர்பாளர் மிராக்பசிக் என் பவர் குயட்டா என்ற பத்திரிகை நிறு வனத்திற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கூறும்போது, "பலுஜிஸ் தான் மக்கள் அடிமைகள்போல நடத்தப்படுகிறார்கள். இதனால் ஜனாதிபதிக்கு எதிராக யுத்தம் தொடுத்துள்ளோம்.இதுபோன்று தொடர்ந்து தாக்குதல் நடத்துவோம்'' என்று தெரிவித்தார். இந்த நிலையில்,முஷரப்பை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று நம்புகிறோம் என இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)




# சதாம் மீதான விசாரணை மிகவும் தாமதமாகவுள்ளது

## ஈராக் பிரதமர் தெரிவிப்பு

பக்தாத், டிச.16

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் மீதான வழக்கு விசாரணை மிகத் தாமதமாக நடைபெறுவதாக ஈராக் பிரதமர் இப்ரஹீம் அல் - ஜஃபாரி புகார் தெரிவித்துள்ளார்.

சதாம் மற்றும் அவரது சகாக்கள் 7 பேர் மீதான வழக்கு விசாரணை கடந்த ஒக்டோபர் 19ஆம் திகதி ஆரம்பமாகியது. ஆனால், இதுவரை 5 நாள்கள் மட்டுமே விசாரணை நடந்துள்ளது. சதாம் உட்பட எதிரிகளும், அவரது வழக்கறிஞர்களும் விசாரணைக்குப் போதிய ஒத்துழைப்பு அளிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இந்த நிலையில் அங்கு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுவதையொட்டி விசாரணை டிசம்பர் 21ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அரபுலக மற்றும் மேற்கத்தேய நாடுகளின் பத்திரிகையாளர்கள் கூட்டம் அல் - ஜஃபாரி இல்லத்தில் நடைபெற்றது.

அப்போது அவர் கூறியதாவது:-

சதாம் ஹுசைன் ஆட்சிக் காலத்தில் கொல்லப்பட்ட ஈராக்கியர்களின் உறவினர்கள் இந்த வழக்கு விசாரணையின் முடிவை ஆவலோடு எதிர்பார்த்துள்ளனர். அவர்களின் எதிர்பார்ப்புக்கு மரியாதை அளிக்கும் வகையில் இந்த வழக்கு விசாரணை நடைபெற வேண்டும்.

சதாம் ஹுசைன் ஆட்சிக் காலத்தில் பாதிக்கப்படாத குடும்பங்களே கிடையாது. அவர்களின் உணர்வுகளுக்கு கண்டிப்பாகப் பதில் சொல்லியாக வேண்டும்

சதாம் மீதான வழக்கு விசாரணை உன்னிப்பாகவும், கண்டிப்பாகவும் நடைபெறும். அதே சமயம் விசாரணையில் வேகம் காட்டப்படும். அதற்கேற்றாற்போல் விசாரணையை விரைந்து முடிக்க காலக்கெடு நிர்ணயிக்கப்படும்.

தற்போது ஈராக்கில் மனித உரிமைகளுக்கு மதிப்பு அளிக்கப்படுகிறது என்றார் அவர். (க)



வீ.எஸ்.ஏகாம்பரநாதன் எழுதிய 'கேதார கௌரி விரதம்' நூல் வெளியீட்டுவிழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இதில் மங்கள விளக்கை சிவஸ்ரீ கே.சிவநேசக் குருக்கள் ஏற்றுவதைப் படத்தில் காணலாம். யாழ். பல்கலைக்கழக ஊடகவியல் துறைப் பணிப்பாளர் பேராசிரியர் ஏ.சண்முகதாஸ், இலங்கை வங்கிப் பிரதிப் பொது முகாமையாளர் எஸ்.பாலசுப்பிரமணியம் மற்றும் நூலாசிரியர் வீ.எஸ். ஏகாம்பரநாதன், கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

## கூட்டம்


யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ்.குடா விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு திருநெல்வேலியிலுள்ள யாழ்.மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் சங்கத் தலைவர் சு.இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ளது. (3-202)

## இலங்கை வங்கிக் கிளைகளில் நாளை ஏல விற்பனை

இலங்கை வங்கியின் யாழ்.மாவட்டத்தில் உள்ள கிளைகளில் அடகுவைத்து மீட்கப்படாத தங்க நகைகள் ஏலத்தில் விற்கப் படவுள்ளன.

கிளைகளில் 30.11.2004 ஆம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு, மீட்கப்படாத நகைகள் நாளை சனிக்கிழமை காலை 9மணி முதல் யாழ்.மேற்தரக் கிளையில் வைத்து ஏலத்தில் விடப்பட வுள்ளன என உதவிப் பொதுமுகாமையாளர் தெரிவித்தார். (3-202)



மெய்கண்டாராதீன மூன்றாம் குரு மஹா சந்நிதானத்தின் பீடாரோகண விழா அண்மையில் வவுனியாவில் சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர் தலைமையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது.

## கூட்டுறவு ஆளணியினருக்குக் கருத்தரங்கு

அரியாலை,டிசெ.16

மக்கள் வங்கியின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையும், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து நடத்தும் யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக ஆளணியினருக்கான இரண்டு நாள் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது.

கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் தினமும் காலை 9 மணிக்கு கருத்தரங்கு ஆரம்பமாகி மாலை 4 மணிக்கு நிறைவு பெறும்.

மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் மாவட்ட மட்ட, இரண்டாம்படி கூட்டுறவுச் சங்கம் மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஆளணி மட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளனர்.

மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் து.ரகு கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவார். (ஒ-17)

## மன அமைதியுடன் வாழ்வதற்கு வழி

மனம் அமைதியாக இருந்தால், வாழ்க்கையும் அமைதியாக இருக்கும். மன அமைதியின்றி இருந்தால் வாழ்க்கை கறைபடிந்த வாழ்க்கையாக, களங்கம் உள்ளதாக இருக்கும்.

மனதில் அமைதி நிலவுவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அது அறநெறிகளையும் இறைவனையும் மனம் பற்றியிருக்க வேண்டும் என்பதுதான்.

இளமைப் பருவத்திலிருந்து தெய்வ பக்தி, நற்பண்புகள், தொண்டு, தியாகம் போன்றவற்றைக் கடைப்பிடித்து வாழ்பவர்கள் வாழ்நாள் முழுவதும் மன அமைதியுடன் வாழ்கிறார்கள்.

ஆடம்பரப் பொருள்களை நாம் 'அத்தியாவசியமானவை என்று கருதுவதால் தேவைகள் அதிகரிக்கின்றன. அதனால் நாம் மனஅமைதியையும் இழந்து, அவதிப்படும் நிலை வருகிறது. விருப்பங்கள் குறையுமளவிற்கு நாம் நிம்மதியுடன் வாழலாம்.

ஞானக்கதிர்

எதன் மீதாவது சந்தேகம் ஏற்பட்டால் மன அமைதி நம்மை விட்டுப் போய்விடும். தீயவை நம் நெஞ்சின் நிம்மதியைப் பறித்து விடுகின்றன. பிறரிடம் அன்பு செலுத்துவது நமக்கு மனஅமைதியைத் தரும்.

நமது உள்ளம் உயர உயர மனஅமைதியும் பெருகும். இறைவனின் திருவடிகளில் மட்டுமே உண்மையான ஆறுதலும் அடைக் கலமும் கிடைக்கும். 'நான், எனது என்பவை நம்மிடமிருந்து நீங்கினால் நமது ஆழ்மனதில் ஆத்மாவில் அமைதி நிலவும்.

*நன்றி: ஞானச்சுடர்.*

## சுனாமி வீட்டு வேலைத்திட்டம்
### முல்லைத்தீவு, மருதங்கேணி, பருத்தித்துறை

கட்டட ஒப்பந்தகாரர்களிடமிருந்து சகல விதமான வேலைகளுக்கும் [கூரை, கதவு, யன்னல் உட்பட] கூலி விவரங்கள் கோரப்படுகின்றன.

வேலைக்கான பொருள்கள் எமது நிறுவனத்தால் வழங்கப்படும்.

*விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:*

பொறியியற் பிரிவு,
சேவாலங்கா மன்றம் (சுனாமி அலுவலகம்)
இல.72, திருநகர்,
கிளிநொச்சி.

(சி-46798)(21.19.17)


நம்பமுடியாத விலையில் .....

# COMPUTER

**Pentium 11, 400 MHz**
**4.2 GB Hard Disk**
**64 MB RAM**
**CD Drive**
**Sound Card**
**Network Card**
**With 17" Colour Monitor**

UPTO **Rs.12,000/=**
இச்சலுகை இன்றும் நாளையும் மட்டும்.

# SAAMSTECH



**SAAMSTECH, A Division of Psalms Technologies Pvt Ltd,**
198, Sampath Bank, 1st Floor, Galle Road, Dehiwala.
841, Hospital Road, Jaffna.
233/4, Kasthuriar Rd, Jaffna.

SAAMSTECH, இங்கிலாந்தில் பதிவுசெய்யப்பட்ட ஒரு நிறுவனம்.
**SAAMSTECH, Ltd**, 145-157, St.Johon Street, London. EC1V 4PY

SAAMSTECH, இன் பதிவு செய்யப்பட்ட அமெரிக்க அலுவலகம்.
8345 NW 66th Street #9164, MIAMI FL 33166-2628

## வேலைவாய்ப்பு

SAAMSTECH, இன் பணிநியமனத்துக்கான பயிற்சிக்கான 50 வீத சலுகைக்கட்டணம் ரூபா 6000 இன்றும் நீடிக்கப்பட்டுள்ளது.
நாளை முதல் பதிவுசெய்வோருக்கு பயிற்சிக்கட்டணம் ரூபா 12000
பயிற்சிக்காலம் : 3 மாதங்கள் தினமும் 4 மணிநேரம்
பயிற்சி முடிவில் ஆங்கில மூலமான செயற்பாடுகளில் பணிநியமனம்


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சத்தியநாதன் இராசமலர்

அம்பலவாணர் வீதி, உடுவிலைச் சேர்ந்த திருமதி சத்தியநாதன் இராசமலர் 14-12-2005 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பையா மற்றும் இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான முருகேசு-இராசம்மா தம்பதியரின் மருமகளும் சத்தியநாதன் (இலங்கை மின்சார சபை) அவர்களின் அன்பு மனைவியும் மதிவதனி, நவநீதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயரட்ணம் (வர்த்தகர்), தர்மரட்ணம், திருமதி ஜெயபாலசுந்தரம் ரஞ்சினி, ஜெயரட்ணம் (லண்டன்), குணரட்ணம் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரியும் திருமதி நன்னித்தம்பி நகுலாம்பிகையின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15-12-2005) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மு.சத்தியநாதன்
[இலங்கை மின்சார சபை, சுன்னாகம்].

*அம்பலவாணர் வீதி,*
*உடுவில் கிழக்கு,* (44151)
*சுன்னாகம்.* (26-19-17-21)

### ஐயம்பிள்ளை சிவசுப்பிரமணியம்



வண்ணார்பண்ணை, நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் சிவப்பிரகாசம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற O.A. கச்சேரி, அனுராதபுரம்) அவர்கள் 15.12.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் தெய்வானை அம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் (சங்கீத பூசணம், ஆசிரியர்), குணரட்ணம் (P.W.D உத்தியோகத்தர்) மற்றும் அமிர்தலிங்கம் (ஓய்வுபெற்ற சேவயர்), சூரியநாராயணன் (ஓய்வுபெற்ற சேவயர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரவீந்திரா (டாக்டர்), ராகினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவமலர், கணேசலிங்கம் (பரிசோதகர், மக்கள் வங்கி) ஆகியோரின் மாமனாரும் உமா, அரவிந்தன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.12.2005) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

*இல.123, சிவப்பிரகாசம் வீதி,*
*வண்ணார்பண்ணை.*
(44148)(21.19.17)


**UNIT**
இந்திய பொறியியல்துறை வல்லுனர்கள் இரண்டு தசாப்தகால அனுபவமுள்ளவர்கள்.

**Unbeatable price Offer**
256MB Kingston Flash Drive - 3300/-
CD ROM - 1900/-
DVD ROM - 3300/-
CD Writter - 3325/-
Combo - 4850/-

ViewSonic/Dell Monitors
Processor
Printer
Scanner & Etc.

All @ Colombo based price

P4 கணனிகள் 1 வருட உதிரிபாக உத்தரவாதத்துடன்

வூபர்கள் மற்றும் கணனி உதிரிகள்
347, K.K.S. Road,
Manohara Theatre Junction,
Jaffna.





ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரச உயர் மட்டக்குழுவை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.கட்சி உயர் குழு நேற்று அலரிமாளிகையில் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படங்கள்.

# புலிகளைத் தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றியத்துக்கு விடுத்திருப்பதாகத் தெரிகின்றது. அந்தக் கோரிக்கையை வலுவூட்டும் விதத்திலான நடவடிக்கைகளையே கொழும்பு அரசு இப்போது ஆரம்பித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தியாவின் முன்னைய பாரதீய ஜனதாக் கட்சியின் அரசுக் காலத்தில் முக்கிய - மூத்த - அமைச்சராக இருந்த எல்.கே. அத்வானி, தமது பிரிட்டன் விஜயத்தின்போது புலிகளைத் தடைசெய்யும் கோரிக்கையை பிரிட்டனிடம் வலியுறுத்தியதை அடுத்தே அவ்வாறு தடைவிதிக்கும் முடிவுக்கு அப்போது பிரிட்டன் வந்ததாகக் கூறப்படுகின்றது.

அதேபோன்று இப்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பு பிரிட்டனின் கைக்கு வந்திருக்கும் இந்தச் சமயத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடுகள் அனைத்திலும் புலிகளுக்குத் தடைவிதிக்கும் கோரிக்கை இந்தியாவிடமிருந்து பிரிட்டன் உட்பட அனைத்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கும் வந்திருக்கின்றது.

இந்தக் கோரிக்கையை வலுப்படுத்தும் விதத்திலான நடவடிக்கைகளை இலங்கைத் தரப்பு எடுக்கவேண்டும் என இலங்கை அரசுத் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

வடக்கு - கிழக்கில் இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்கள் குறித்து அதிர்ச்சி அடைந்திருக்கும் கொழும்பு அரசின் தலைமைத்துவம், புலிகளின் எதேச்சாதிகாரமான போக்கே இந்நிலைமைக்குக் காரணம் என்று கருதுகின்றதாகத் தெரிகின்றது.

இறுதியாக நேற்றுமுன்தினம் அம்பாறையில் விமானப்படையின் ஹெலிகொப்டர் மீது நடத்தப்பட்ட சூட்டுச்சம்பவம் அரச தலைமைத்துவத்தை மேலும் ஆத்திரத்திற்குட்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையிலேயே, விடுதலைப் புலிகளைத் தடைசெய்யுமாறு ஐரோப்பிய ஒன்றியத்திடம் இந்தியா விடுத்தவேண்டுகோளை ஆமோதிக்கும் வகையில் இலங்கை அரசு சார்பில் வேண்டுகோள் ஒன்றை விடுப்பதென்று அரசதலைமை தீர்மானித்திருக்கிறது. இது தொடர்பான பணிப்புரை வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீரவிற்கும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பிய நாடு களில் தடைசெய்து அழுத்தமொன்றை வழங்கினால் விடுதலைப் புலிகள் அமைப்[illegible]க்கு விரைவில் திரும்புவார்களென இலங்கை ஜனாதிபதி எதிர்பார்க்கிறார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறின.

(எ-க)


**SHAMROCK**

J/Eachchamoddai Road,

* Gr.2 முதல் 11 வரை
* Eng. Medium 6+7
* Eng. Literature 10+11
* A/L English


## மரண அறிவித்தல்கள்

### முத்தன் சிவசம்பு

புன்னாலைக்கட்டுவன் தெற்கை பிறப்பிடமாகவும் அச்செழுவை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தன் சிவசம்பு நேற்று (15.12.2005) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தவமலரின் அன்புக் கணவரும் ரதிதேவி, இதயராணி, ரவிச்சந்திரன், உதயன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவிச்சந்திரன், காலஞ்சென்ற பரமேஸ்வரன், சசிகலா கீதா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (16.12.2005) வெள்ளிக்கிழமை அச்செழு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்[illegible]

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை[illegible] ஏற்றுக்கொள்ளவும்.

*அச்செழு,*
*நீர்வேலி.*

(44169)
(54-34-13)

தகவல்:
**சி. ரவிச்சந்திரன் (மக[illegible]**

### நாகநாதர் இராமச்சந்திரன்



அல்லாரை தெற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் ஆசிரியர் வீதி, சங்கத்தானை சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் தற்பொழுது சுவிற்ஸலாந்தில் வசித்துவந்தவருமான நாகநாதர் இராமச்சந்திரன் அவர்கள் 10.12.2005 சுவிற்ஸலாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதர்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் சுபேந்தர் (அகாலமரணம் லண்டன்), சுகுராம் (கனடா), சுதாஜி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பொன்னம்பலம்-சரஸ்வதி (அமரர்) தம்பதியரின் மருமகனும் திரவியநாயகம், பரமேஸ்வரி (மணி-அமரர்), ஆகியோரின் பாசமிகு தம்பியும் தங்கராணி, ஜெகசோதி, ஞானகலை, கணேசலிங்கம், விநாயகமூர்த்தி (ராசர்ன்-கொழும்பு), வேல்முருகா (ஜேர்மனி), யோகேஸ்வரன் (பஞ்சு-லண்டன்), ஆகியோரின் பாசமிகு அண்ணாவும் கதிர்காமநாதன், சின்னத்துரை, கனகசபை, சுந்தரலிங்கம், சிவராசா (ஓமான்), இந்துமதி, ஜெயந்தினி (ஆசிரியர்-வவுனியா சித்திவிநாயகர் மகாவித்தியாலயம்), நாகராசா (அமரர்), நாகேஸ்வரி (இத்தாலி), சிவராசா -சங்கர், சிறி (அமரர்) ஆகியோரின் மைத்துனரும் நவநீதராஜா-நவம் என்பவரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2005) வெள்ளிக்கிழமை சுவிற்ஸலாந்து வேண் (Bun) இல் நடைபெற்று, பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இன்று (16.12.2005) வெள்ளிக்கிழமை அன்னாரின் பிறந்த இடமான அல்லாரை தெற்கு, மீசாலையில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

*157/7, சுமித்திரரா மாவத்தை,*
*கொழும்பு -13.*
*T.P: 0779567094*
*www.uthayan.com*

(44165)
(54-34-13)

தகவல்:
**குடும்பத்தினர்.**

### நாகலிங்கம் நவரத்தினம்



**(உரிமையாளர், நியூ லதா ஸ்ரோர், காலி-மகாமாரியம்மன் ரேடஸ், யாழ்ப்பாணம்)**

வேலணை மேற்கைச் சேர்ந்த நாகலிங்கம் நவரத்தினம் அவர்கள் நேற்று (15.12.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பண்டாரவளை வர்த்தகர் நாகலிங்கம்- இராசம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் பொன்னுத்துரை, காலஞ்சென்ற திருமதி இரத்தினம் ஆகியோரின் மருமகனும் சறோஜினி தேவியின் அன்புக் கணவரும் ஜெயக்குமார், லதா, நந்தகுமார், சுரேஸ்குமார், தினேஸ்குமார் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும். ரஞ்சன் (பொறியியலாளர், கட்டார்) அவர்களின் பாசமிகு மாமனும் மரகதவல்லி, பாலசிங்கம் (காலி-வர்த்தகர்), இராசலெட்சுமி, காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற சுவாமிநாதன், திருமுறைச்செல்வி, காலஞ்சென்ற இரத்தினம் (ஆசிரியர்), விஜியலெட்சுமி, லிங்கப்பிள்ளை, இரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் உலகநாயகியின் சகோதரனும் சண்முகராஜா (உரிமையாளர், Home Needs -காலி) சகலனும் தனுசன், ரதுசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அவரின் வேலணை மேற்கு இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. அன்னாரின் இறுதி கிரியைகள் 18.12.2005 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக வேலணை அம்பலவி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேலணை மேற்கு,*
*வேலணை.*

(44164)
(54-34-13)

தகவல்:
**மனைவி, மக்கள், குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா அரிராசசிங்கம்



**[முன்னாள் பிரபல கணித ஆசான், யா/இந்துக் கல்லூரி]**

கோப்பாய் தெற்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அரிராசசிங்கம் (முன்னாள் உபஅதிபர், யா/ புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி, முன்னாள் பிரபல கணித ஆசான், யா/இந்துக் கல்லூரி) அவர்கள் 14.12.2005 புதன்கிழமை இரவு அன்னாரின் இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற திரு.திருமதி குமாரசாமி அவர்களின் பாசமிகு மருமகனும் திருமதி தங்கராணி (முன்னாள் அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை, கல்விப் பணிப்பாளர் -திருகோணமலை) அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற திருமதி அரியம்மா செல்லத்துரை, காலஞ்சென்ற அன்னரத்தினம், இரத்தின சபாபதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் Dr.சுமதி (ஆஸ்திரேலியா), சசிதரன் (கணக்காளர், லண்டன்), Dr.மகிதரன் (Comalfant, லண்டன்), மயூரி (B.Sc. Chemistry ஆசிரியர், சைவ மங்கையர் கழகம்), சுஜதரன் (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேந்திரவர்மன் (M.Sc. பொறியியலாளர், ஆஸ்திரேலியா), சோபனா (B.A., லண்டன்), நந்தினி (M.Sc. Chemistry, லண்டன்), Dr.விக்கினேஸ்வரன் (காராபிற்றி வைத்தியசாலை, காலி) ஆகியோரின் அன்பு மாமனும் வைஷ்ணவன், வைஷ்ணவி, அருண், அர்ச்சனா, கீர்த்தனா, சாரஜா, சானுஜா, சைலஜா, கஜானி, தரனேஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.12.2005 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*''சந்திரவாசா''*
*பழைய தபாற்கந்தோர்*
*முன்னொழுங்கை,*
*கோப்பாய்.*

(44168)
(54-34-12)

தகவல்:
**திருமதி தங்கராணி-அரிராசசிங்கம் (மனைவி).**

### அப்பர் தியாகராசர்

**[ஓய்வுபெற்ற படவரைஞரும் தொழில்நுட்ப உத்தியோகத்தரும்]**

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட அப்பர் தியாகராசர் நேற்று (15.12.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் திலகவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அப்பர்-நாகம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற பெருமையினார்-முத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சிவகுமார்(பிரான்ஸ்), ஸ்கந்தகுமார்(லண்டன்), ஞானசக்தி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கெங்காதரன் (பிரான்ஸ்), சுபாசினி(பிரான்ஸ்), அருணா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் நிஷாங்கன், நிதுஷன், நீரஜா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், குமாரசாமி, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பத்மினிதேவி, காலஞ்சென்ற சிவகுமார் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(17.12.2005)சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துதுறை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*''திலகவாசா''*
*ஞானசம்பந்தர் வீதி,*
*வட்டு. தென்மேற்கு,*
*வட்டுக்கோட்டை.*

(சி. 46805)
(54-34-12)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**


**ராஜா யாழ்ப்பாணம்**

இன்று முதல்
பிரசன்னா, மீராஜஸ்மின் நடித்த
**கஸ்தூரிமான்**
காட்சிநேரம்: பு.நே. 10.30, 1.30, 4.30, 7.30

**நாதன்ஸ் யாழ்ப்பாணம்**



ஷாம், சினேகா, அபர்ணா நடித்த
காட்சி நேரம் மாற்றம்
10.30, 2.00, 5.15, 8.15
**ABCD** 10.30, 2.00, (பு. நே)
Super Star Hero Pom Cruise in *War of the World*
5.15, 8.15 (ஆங்கிலம்)

**மனோகரா யாழ்ப்பாணம்**

7ஆவது வெற்றி வாரமாக இளைய தளபதி விஜய், அசின், பிரகாஷ்ராஜ் நடித்த
**சிவகாசி**
கா.நே:10.30,2.30,6.30,9.30(பு.நே)
காலை 10.30 காட்சியாக சிவகாசி
1.30,4.30,7.30,10.30 காட்சியாக சூரியா, திரிஷா வடிவேல் நடித்த
**ஆறு**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
9 ஆம் திகதி முதல் புதிய நேரப்படி புதிய காட்சி நேரம்
காலை 10.30, மதியம் 1.30, மாலை 4.30, இரவு7.30,10.30

**நாதன்ஸ் யாழ்ப்பாணம்**

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடாக
அர்ஜுன், நமிதா, வடிவேல் நடித்த
**ஆணை**



தினசரி: புது நேரம் 11.00, 3.00, 7.00,10.00

# அனுசரணைப் பணியைத் தொடர்வதில் நோர்வே மிக உறுதியாக உள்ளதாம்

## வெளிவிவகார அமைச்சர்கள் மட்ட சந்திப்பின் பின்னர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.16

இலங்கை விடயத்தில் அனுசரணைப் பணி வகிப்பதில் நோர்வே புதிய அரசு திடசங்கற்பம் பூண்டிருக்கிறது.

- இவ்வாறு நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜொனஸ் கஹ்ஸ்ரோர் தெரிவித்தார் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

நேற்று இலங்கை - நோர்வே வெளிவிவகார அமைச்சர்களுக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்புக் குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

உலக வர்த்தக நிறுவனக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக ஹொங்கொங் சென்றிருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அங்கு நோர்வே வெளிவிவகார அமைச்சரை நேற்று மாலை சந்தித்து பேசினார்.

இச்சந்திப்புக் குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சு விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கையின் அமைதி நடிவடிக்கைகளில் நோர்வேயின் அனுசரணைப் பங்களிப்பு உட்பட இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர நல்லுறவு தொடர்பான பல்வேறு விடயங்களை இரு அமைச்சர்களும் தமது கலந்துரையாடலில் விரிவாகப் பேசிக்கொண்டனர்.

அமைதி நடவடிக்கைகளிலும் அதில் நோாா்வேயின் அனுசரணைப்பங்களிப்பிலும் இலங்கை புதிய ஜனாதிபதி பற்றுதியுடன் இருப்பதை அமைச்சர் சமரவீர இச்சந்திப்பில் மீள உறுதிப்படுத்தினார்.

பேச்சை மீளத் தொடங்குவதற்கான செயற்பாட்டு நடைமுறைகள்குறித்தும் இலங்கை அமைச்சர் ஆலோசனை நடத்தினார்.

அமைதி நடவடிக்கைகளை முன்னெடுக்க இலங்கை அரசு வெளிப்படுத்திய பற்றுறுதியை நோர்வே வெளிவிவகார அமைச்சர் வரவேற்றார். அனுசரணைப்பணியைத் தொடர்வதில் நோர்வே புதிய அரசு உறுதியாக இருப்பதை நோர்வே வெளிவிவகார அமைச்சர் வெளிப்படுத்தினார்.

இலங்கை அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் பேச்சுகள் மீள ஆரம்பிப்பதற்கான பணிகளைத் தொடங்குவதற்காக நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹேய்ம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதை இரு அமைச்சர்களும் எதிர்பார்த்திருக்கின்றார்கள் எனத் தெரிவித்தனர்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் - விசேட தூதுவர் ஒருவர் உட்பட்ட - நோர்வேயின் அணியின் விவரம் விரைவில் அறிவிக்கப்படும்.

யுத்த நிறுத்தத்தை சீரிய முறையில் கண்காணித்து நடைமுறைப்படுத்துவதை பலப்படுத்துவதற்கான பேச்சுகள் அடுத்த வருடம் முற்பகுதியில் தொடங்கும் என்று அமைச்சர்கள் நம்பிக்கை வெளியிட்டனர். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க)

---

## காணாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இழந்த பெற்றோர்கள், பாதுகாவலர் சங்கம் மற்றும் அன்னையர் முன்னணி ஆகியன முடிவு செய்துள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களின் உண்மை நிலையைப் பொறுப்பு வாய்ந்த அரசின் தலைவர் என்ற வகையில் அவமதித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மற்றும் இச்சம்பவங்களில் தொடர்புடைய இராணுவ அதிகாரிகள் ஆகியோரும் இந்த வழக்கில் எதிர்த்தரப்பினராகச் சேர்க்கப்படவுள்ளனர்.

இலங்கை அரசின் மீதும், அரசின் நீதித்துறையின் மீதும் தாங்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர் எனவும் அவர்களால் தமக்கு உரிய நீதி கிடைக்காது என்பதால் தாம் சர்வதேச நீதிமன்றத்தைநாட முடிவு செய்திருக்கிறார்கள் எனவும் பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர் சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர். (எ-க)

---

## முஸ்லிம்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய ஜும்ஆத் தொழுகையை அடுத்து மருதானை ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் முஸ்லிம்கள் அனைவரையும் வந்து கலந்துகொள்ளுமாறு முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் முஜிபுர் ரஹ்மான் கேட்டுக்கொண்டுள்ளார். (எ-க)

---

## பத்திரிகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவத்தை அறிந்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரிகள் நேற்று நண்பகல் அளவில் பத்திரிகை அலுவலகத்துக்குச் சென்று விசாரித்தனர்.

முன்னறிவித்தல் இன்றி பத்திரிகை அலுவலகத்தைச் சோதனையிட்டது பணியாளர்களை உளவியல்ரீதியாகப் பாதிக்கும் செயற்பாடு - என்று பத்திரிகை நிறுவனத்தினர் கண்காணிப்புக் குழுவினரிடம் சுட்டிக்காட்டினர். இதுபோன்று எதிர்காலத்தில் நடைபெறாமல் இருக்கப் படையினருக்குத் தெரியப்படுத்த வேண்டியதையும் நிறுவனத்தினர் வலியுறுத்தினர். (அ-3)

---

# ஆசிய நாடு ஒன்றில...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்க, செயலாளர் ரில்வின் சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, அனுர குமார திஸாநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகளுடனான அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்காக அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து அங்கு ஜனாதிபதி விளக்கிக் கூறினார். அதே சமயம் அனுசரணைத் தரப்பின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு எந்தவொரு பேச்சுக்கும் அரசு செல்லக் கூடாதென ஜே.வி.பி. திட்டவட்டமாகத் தெரிவித்தது.

அதேவேளை, விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படும் எந்தப் பேச்சுகளும் ஐரோப்பிய நாடுகளில் நடத்தப்படக் கூடாதென்றும் ஜே.வி.பி. கண்டிப்பாகக் கூறிவிட்டது.

எவ்வாறாயினும் போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான பேச்சுகளை ஆசிய நாடொன்றில் நடத்துவதற்கு தாம் விரும்புகிறார் எனவும், அது பற்றி புலிகளுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் ஜே.வி.பியினரிடம் ஜனாதிபதி அங்கு சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

அந்தப் பேச்சுகளை ஜப்பானில் நடத்துவதற்கு ஜே.வி.பி. இணக்கத்தை வெளியிட்டிருக்கிறது. இதேவேளை, அடுத்த வருட முற்பகுதியில் உள்ளூராட்சித் தேர்தல்களை உரிய காலத்தில் நடத்த வேண்டுமெனவும் ஜே.வி.பி. அங்கு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியிருக்கிறது. இதுபற்றி ஆராய்ந்து உரிய தீர்மானத் தைத் தாம் எடுப்பார் என ஜனாதிபதி இந்தச் சந்திப்பில் ஜே.வி.பி.பிரதிநிதிகளிடம் உறுதியளித்திருக்கிறாரெனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-க)

---

## படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியே நின்றவாறு மக்கள் படை என இனம் காட்டிக் கொண்டவர்கள் கண்காணிப்புக் குழுவினரைச் சந்திக்க அனுமதிக்குமாறு கோரினர்.

கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டத் தலைவர் அரிபெக்காநிமெலா அலுவலகத்தில் இருந்து வெளியேவந்து நுழைவாயில் வெளியே நின்ற மக்கள் படையினரிடம் மகஜரினை உள்ளே நின்றவாறு பெற்றுக் கொண்டார்.

அதன் பின்னர் மக்கள் படையின் பிரதிநிதி ஒருவர் மட்டுமே அலுவலகத்தினுள் பிரவேசிக்க முடியும் என்று கூறிய கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் மக்கள் படைப் பிரதிநிதி ஒருவரை தமது அலுவலகத்திற்குள் அழைத்துச்சென்று பேச்சு நடத்தினர்.

- அப்போது நுழைவாயிலில் வெளியே நின்றவர்கள் தாங்களும் பேச்சுகளில் ஈடுபட வேண்டும் என்று கோரி அலுவலகக் கேற்றின் மேல் ஏறிப்பாய்ந்து சென்று அலுவலகத்தினை முற்றுகையிட்டனர்-

இதனையடுத்து, பேச்சு நடத்திக் கொண்டிருந்த கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதி அலுவலகத்தைவிட்டு வெளியே வந்து அலுவலகத்தை முற்றுகையிட்டவர்களை அங்கிருந்து கலைந்து செல்லுமாறு கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து மக்கள் படையினர் உடனடியாகவே கலைந்து சென்று வீதிக்கு வந்தனர்.

அதன் பின்னர் வீதியால் சென்ற மக்களுக்கு 'பொங்கி எழும் மக்கள் படை'யென அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களை விநியோகித்த மக்கள் படைப் பிரதிநிதிகள் பின்னர் அப்பகுதியில் இருந்து கலைந்து சென்றனர். (எ-7)

---

## மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களான ஜீ.எல். பீரிஸ், ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்காக அரசு திட்டமிட்டிருக்கும் நடவடிக்கைகள் பற்றி ஐ.தே.கவினருக்கு விரிவாக விளக்கமளித்த ஜனாதிபதி வடக்கு - கிழக்கில் ஏற்பட்டிருக்கும் மோதல்களுடன் கூடிய பதற்றமான நிலைமை குறித்தும் எடுத்துக் கூறினார்.

அமைதி முயற்சிகளை ஆரம்பித்துப் பேச்சுகளை நடத்தும்போது தேவைப்படும் ஒத்துழைப்பை வழங்க ஐ.தே.க.தயாராக இருப்பதாகவும், அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்காக எடுக்கப்படும் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படுமென்றும் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறப்பட்டதாக ஜோசப் மைக்கல் பெரேரா எம்.பி. நேற்று மாலை 'உயதனு'க்குத் தெரிவித்தார்.

அமைதி முயற்சிகள் தொடர்பாகத் தங்களது நிலைப்பாடு தெளிவானது என்றும் -

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதான அதே நிலைப்பாட்டிலேயே ஐ.தே.கட்சி உள்ளது என்றும் -

ஆகவே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அரசுமே அமைதி முயற்சிகள் தொடர்பான தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் -

அது தெரியப்படுத்தப்பட்டால் ஐ.தே.கட்சி தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி, அமைதி முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு தனது முழு ஒத்துழைப்பை நல்கும் என்றும் -

ஐ.தே.கட்சியின் உயர்குழு ஜனாதிபதியிடம் தெரிவித்ததாகவும் கூறப்பட்டது. (எ-க-6)

---

# குடாநாட்டில் தீவிர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை சுற்றிவளைக்கப்பட்டு தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. ஆயுதம் தாங்கிய படையினர் பெரும் எண்ணிக்கையில் இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

வீட்டில் இருப்பவர்களின் விவரங்களைக் கேட்ட படையினர் அனுமதியின்றி அறைகளுக்குள்ளும் புகுந்து தேடினர். இராணுவத்தினர் சப்பாத்துக் கால்களுடன் தமது பூஜை அறைகளுக்குள்ளும் நுழைந்தார்கள் என்று இந்து சமயத்தவர்கள் பெரும் விசனம் தெரிவித்தனர்.

பெண்போராளிகள் முன்னர் தங்கியிருந்த நாவலர் வீதியில் உள்ள வீட்டினையும் படையினர் சல்லடைபோட்டனர். அந்த அலுவலகம் புலிகளின் அரசியல்துறைக் கிளையாகவும் பெண் போராளிகளின் மருத்துவப் பிரிவாகவும் முன்னர் செயற்பட்டு வந்தது. குடாநாட்டைவிட்டுப் போராளிகள் வெளியேறிவிட்டனர் என்பதால், அந்த வீடு பூட்டிக்கிடந்தது. அதனை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்த படையினர் அங்கே சுமார் அரை மணி நேரம் தேடுதல் நடத்தினர். எனினும் அங்கிருந்து சந்தேகத்திற்கிடமான எந்தப் பொருள்களும் இராணுவத்தினரால் கைப்பற்றப்படவில்லை.

அந்த வீட்டிற்குள் இருந்த மாமூடைகள், சைக்கிள்கள், தளபாடங்கள், சக்கர நாற்காலிகள், கட்டில்கள் என்பவற்றையும் படையினர் எடுத்து தமது வாகனங்களில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

வீடுகளுக்குள் வெடி பொருள்கள், குண்டுகள், துப்பாக்கிகள் என்பவை மறைத்து வைக்கப்பட்டுள்ளனவா என்று கண்டறிவதற்காகவே இந்தச் சோதனை நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் திடீர் சுற்றிவளைப்புத் தேடுதல்களால் நகரப் பகுதி நேற்றுக்காலை பெரும் பதற்ற நிலையில் காணப்பட்டது.

போர் நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி இவ்வாறான தேடுதல் நடவடிக்கைகள் அத்துமீறலானவை என்று பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன. (எ-க-3-7-13)

---

# பேச்சுகளில் மூன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயார் என்ற முடிவுக்கு நோர்வே வந்து, அத்தரப்பின் அனுசரணையோடுதான் அத்தகைய பேச்சுகள் நடைபெறவேண்டும்.

அடுத்தது - போர்நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்துவது குறித்துத்தான் பேசவேண்டுமேயொழிய, போர் நிறுத்த உடன்படிக்கையைத் திருத்துவது குறித்தல்ல - என்றும் புலிகள் வலியுறுத்துவர்.

இந்த இரண்டு அடிப்படைகளையும் ஏற்றுக்கொண்ட நிலையில் நடைபெறக் கூடிய பேச்சுகளில் மூன்று அம்சங்களைப் புலிகள் வலியுறுத்துவர்.

✱ முதலாவது - போர்நிறுத்த விதிகளின்படி வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் உள்ள துணைப்படைகள் மற்றும் கருணா குழு போன்ற ஆயுதக் குழுக்கள் போன்றவற்றை நிராயுதபாணிகளாக்கி வடக்கு - கிழக்கிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். இக்குழுக்களே போர் நிறுத்த உடன்பாடு குழம்பிப் போகக் கூடிய அளவுக்கு வன்முறைகள் வெடிப்பதற்கு மூலகாரணம். அவற்றை அப்புறப்படுத்துவதில் நேர்மையுடன் இலங்கை அரசு செயற்படுமானால் யுத்தநிறுத்தம் செம்மையாக நடைமுறைப்படுத்தும் உறுதியான சூழ்நிலை ஏற்படும்.

✱ இரண்டாவது - யுத்தநிறுத்த உடன்பாட்டின்படி உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் அரசுப்படைகள் ஆக்கிரமித்திருக்கும் பிரதேசங்களில் தமிழ் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட வேண்டும்.

✱ மூன்றாவது - யுத்த நிறுத்த உடன்பாட்டின்படி தமிழர் தாயகத்தில் உள்ள தனது இராணுவத் தளங்களை இலங்கை அரசு விஸ்தரிக்க முடியாது. விஸ்தரிக்கக் கூடாது. எனவே, பலாலி விமானத் தள விஸ்தரிப்பு, வாழைச்சேனை புன்னைக்குடாவில் புதிய கடற்படைத் தளம் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை அரச தரப்பு உடன் நிறுத்த வேண்டும்.

- இந்த மூன்று விடயங்களையும் உத்தேச பேச்சுகளில் புலிகள் தரப்பு வலி யுறுத்தும் எனப் புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-க)


**பிரத்தியேக வகுப்பு**
O/L 2006
தரம் 10,9
கணிதம்
சங்கர்
உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
★மற்ஸ் A க்கு உத்தரவாதம்
தொடர்பு:
Derector
J/NEW SCIENCE HALL
0777917611
(44137)

**College of English**
பிறவுண் வீதி, யாழ்.
ஆறே மாதத்தில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க
Spoken English with Grammar
Mr.T. Thanendran
17.12.2005
Sat, Sun, 4.30 p.m
(44167)

**கணக்கீடு**
புதிய அலகுகள் நாளை ஆரம்பம்

| | |
|---|---|
| A/L 2006 பிரசுர முடிவுக்கணக்கு | 4 p.m. |
| A/L 2006 கிரயக் கணக்கீடு | 5 p.m. |
| A/L 2007 உற்பத்திக் கணக்கு | 3 p.m. |
| A/L Day கம்பனி Paper | 11 a.m. |
| A/L Day கிரயக் கணக்கீடு | 12 a.m. |

(யாவும் பழைய நேரப்படி)
S. தவா
B. Com., (Hons) (Acc. sp.)
New SCIENCE COLLEGE JAFFNA.
(44156)

**SAAMSTECH**
கணனி மலிவு
14 ஆம் பக்கம் பார்க்கவும்
841, Hospital Road, 233/4 கஸ்தூரியார் வீதி.
(44143)

**BRIGHTMAN**
நாவலர் வீதி, A/L 2007 யாழ்நகர்.
இரசாயனவியல் அரேதன இராயவர்
By: DIAS (Sat., Sun., 3 - 4)
பௌதிகவியல் ஒளிரியல்
By: ஜெயசீலன் (Sat., Sun.,4 - 5)
ஆரம்பம் - 17.12.2005 Sat.
(44163)

**A/L 2006**
தனிப்பட்ட, வெளிவாரி மாணவருக்கான 4 மாத கற்கைநெறி
(ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்)
பொருளியல், தமிழ் இந்துநாகரிகம், அளவையியல்
காலம்: கிழமைநாள்களில் 2-6 மணி
DMI ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**S.L.A.S. பரீட்சை வழிகாட்டி**
கட்டுரையும் சுருக்கமும்
தொகுப்பு: த. தவசேகர் B.Sc., P.G.D.E.
✱ கட்டுரைகள்
✱ சுருக்கம்
✱ மாதிரிவினாத்தாள்கள்
18.12.2005 ஞாயிறு முதல் வகுப்புகளிலும், பிரதான புத்தக நிலையங்களிலும் கிடைக்கும்
கடந்த இருவாரங்கள் நடைபெறாது இருந்த S.L.A.S. வகுப்பு D.M.I யாழ்.நகரில் சனி2மணிஞாயிறு 10.30 மணிக்கு நடைபெறும். (மாதிரிவினாத்தாள் வகுப்பு)
(44113)

**PREMISES AVAILABLE FOR RENT**
A house with extensive land in front and behind and close to Route A-9 and Jaffna District secretart for Immedite Occupation
NGO's preferred.
Please contact
T.p. 0112580204 , H.p.0776148432

**நிரு ரியூசன் சென்ரர் கோண்டாவில்**
A/L 2007
வெப்பவியல்
By: M.கருணாநிதி
ஆரம்பம்
10.12.2005
(Sat.,Sun. 4-5)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.12.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.